# 2018

# වාර්ෂික වාර්තාව සහ වාර්ෂික මූල්‍ය ප්‍රකාශන

# ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

# Annual Report and Annual Financial Statements

IHRA

UNIVERSITY OF COLOMBO


මානව සම්පත් අභිවර්ධන ආයතනය, කොළඹ විශ්වවිද්‍යාලය

மனிதவள மேம்பாட்டு நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம்

**Institute of Human Resource Advancement, University of Colombo**

# நோக்கக் கூற்று

"உலகளாவிய சூழலில் முற்போக்கான சமூகத்தின் அபிவிருத்தியின் நிமித்தம் மனித வளத்தினை மேம்படுத்துவதற்கு கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுக்கான மிகச் சிறந்த நிலையமாகப் பரிணமித்தல்".

IHRA
UNIVERSITY OF COLOMBO

# பணிக் கூற்று

"தலைமைத்துவம், தொழில் முயற்சிகள் மற்றும் விமர்சன ரீதியிலான சிந்தனைத் திறனை விருத்தி செய்வதன் மீது கவனத்தைச் செலுத்தி உயர் சமூக மற்றும் ஒழுக்க நெறிமுறைகளுடான அர்ப்பணிப்புடன் அலுவல் மேற்கொள்ளும் பணியாட்தொகுதி மற்றும் அதி நவீன தொழில்நுட்பம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி செயற்பாடுகளின் ஊடாக முகாமைத்துவம், முகாமைத்துவம் சாராத ஊழியர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு கற்றல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக தேசிய ரீதியில் போட்டித் தன்மை மற்றும் சர்வதேச அங்கீகாரத்திற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல் "

# விழுமியங்கள்

## விழுமியம் 01

### கல்விக்கான சுதந்திரம

தனது முறையான உயர்கல்வி நடவடிக்கைகள் இடைநடுவில் தடைப்பட்ட முகாமையாளர்கள் அல்லாத ஊழியர்களின் இலவசக் கல்விக்கான வாய்ப்பை தொடர்ந்து ஏற்படுத்திக்கொடுப்பதுடன், உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாதுபோன முகாமைத்துவ ஊழியர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களை விருத்தி செய்வதனை நாம் பாராட்டுகின்றோம்.

## விழுமியம 02

### முற்போக்குச் சிந்தனை

ஒவ்வொருவருடைய கடமைகளையும் உயர் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு எமது கூட்டு முயற்சியின் பெறுபேறுகளை நியாயமான முறையில் பகிர்ந்துகொண்டவாறு மற்றும் நாம் பெற்றுக்கொண்டவற்றை மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினுள் மற்றும் அதற்கு வெளியில் எதிர்கால சந்ததிக்காக நிலைபேறான வகையில் பேணியவாறு மற்றும் முன்னேற்றியவாறு சமூக மேம்பாட்டிற்காக அலுவல் மேற்கொள்வதனை நாம் மதிக்கின்றோம்.

## விழுமியம 03

### பல்வகைமை மற்றும் உள்ளடக்கம்

நாம் பல்வகைமையை மதித்தல் மாத்திரமன்றி எமது நிறுவனம் மற்றும் சமூகம் பல்வகைமையின் ஊடாக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதனை உறுதி செய்வதற்காக எமது பண்பாடுகள், நம்பிக்கைகள், பின்னணி, திறமைகள் மற்றும் அலுவல் நோக்குநிலையின் மாற்றங்களை ஏற்று விருத்திசெய்யும் உள்ளீர்ப்பு கலாசாரத்தை நாம் மதிக்கின்றோம்.

## விழுமியம 04

### சமூக ஆன்மீகம

உட்பொருளாக மற்றும் ஆன்மீகமாக அபிலாஷ‘களைப் பரிமாறிக்கொள்ளும் பிரிவினராக (குழுவாக) மாறுவதனை நாம் மதிப்பதுடன் அவ்வாறு நாமே சமூகமொன்றாகக் கட்டியெழுப்புவதனை நாம் மதிக்கின்றோம்.

## விழுமியம 05

### நாம் மேற்கொள்பவைகளை ஒப்படைத்தல்

உயர்கல்வி நிறுவனமொன்றாக நாம் பேணிவர வேண்டிய இரகசியத்தன்மை மீறப்படாத அளவுக்கு அறிவு மற்றும் தகவல்களுக்காக வரையறுக்கப்படாத பிரவேசத்தை செயலூக்கத்துடன் ஊக்கப்படுத்துவதுடன் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களிடையே மற்றும் அதனையும் தாண்டி பண்பாட்டுடனான சரியான நடத்தையை நாம் ஊக்குவிக்கின்றோம்.

# பணிப்பாளரின் மதிப்பாய்வறிக்கை

"எமது சமூகம் முன்னேற வேண்டும் மற்றும் முன்னேற முடியுமென நாம் நம்புகின்றோம். நாம் எதிர்பார்க்கின்ற முன்னேற்றம் தொடர்ச்சியானதும் படிப்படியானதுமாகும். எமது இலக்காகிய முன்னேற்றம் எமது பொருளாதார, சமூக, கலாசார அபிலாஷகளின் பூரண தழுவலாகும். முற்போக்கான சமூகம் என்பது அந்த சமூகத்தில் வாழும் பிரஜைகளின் சமூக, கலாசார மற்றும் அரசியல் அபிலாஷ களை யதார்த்தமாக்கிக் கொள்ளும் அமைப்பாகுமென நாம் நம்புகின்றோம்."

2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் கல்வியின் அனைத்துப் பரப்புகளிலும் பட்டப்பின் படிப்பு, இளமாணிப் பட்டம், டிப்ளோமா மற்றும் சான்றிதழ் மட்டங்களில் பரந்த அளவிலான நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வரும் ஒரு முன்னணி கல்விசார் நிறுவனமாக தேசத்திற்குத் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றது. குறிப்பிட்ட ஆண்டில் குறிப்பிடத்தக்க விசேட விடயம் என்னவெனில் மாற்றத்திற்கான எமது ஆரம்பத்தை தொடர்ந்து பேணி வருவதற்கான எமது அர்ப்பணிப்பை மனித வள அபிவிருத்திக்கான முதலீட்டின் ஊடாக தெளிவாகுவதாகும்.

2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியை எடுத்தியம்பும் தனிச் சிறப்பான பல வெற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் அது எதிர்காலத்திற்கு முகங்கொடுப்பதற்கான ஆயத்தம் என்பதனை உணர்த்துகின்றது. முதலில் நிறுவனம் பட்டப்பின் படிப்பு, நிறைவேற்று ∴ உயர் டிப்ளோமா மற்றும் டிப்ளோமா போன்ற மறுசீரமைக்கப்பட்ட கல்விசார் திட்டங்களை ஆரம்பித்தது. இரண்டாவதாக, புதிய பிரிவுகளை ஆரம்பித்து ஊழியர்களைப் பயிற்றுவித்து மற்றும் அதன் நெறிமுறைகளைத் திருத்தியமைப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வெளித்தரப்பினருடன் நடவடிக்கை மேற்கொண்டு நிறுவனம் மறுசீரமைக்கப்பட்டது. மேலும், முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பௌதீக மேம்படுத்தல் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியுமாகியது.

மாணவர் பரிமாற்றல் வேலைத் திட்டங்கள் மற்றும் 2019 இலும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள மூன்றாம் தரப்பு பயிற்சித் திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் நெருங்கிய வகையில் நடவடிக்கை மேற்கொண்டு நிறுவனத்தின் சர்வதேசமயப்படுத்தலை மேம்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டில் நாம் கவனம் செலுத்தினோம். எமது சர்வதேசமயப்படுத்தல் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக தனியான ஒரு பிரிவை நாம் தாபித்துள்ளதுடன தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கும் முன்னின்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மொத்தமாக சுமார் 522 மாணவ, மாணவிகள் கல்வி பயிலும் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னணித் திட்டமான தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறிக்காக 2018 ஆம் ஆண்டில் சுமார் 221 புதிய மாணவர்கள் பதிவு செய்துகொண்டுள்ளனர். மேலும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் அல்லது தொழிசார் மட்டத்தின் சுமார் 732 மாணவர்கள் பட்டப்பின படிப்பு பாடநெறிகளைப் பயின்றதுடன் அப்பாடநெறிகளாவன, வணிக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு பாடநெறி, மனித வளங்கள் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு பாடநெறி, சேவைகள் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு பாடநெறி, புவியியல்சார் தகவல்கள் விஞ்ஞானமாணி பாடநெறி, மற்றும் அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் பற்றிய விஞ்ஞானமாணிப் பாடநெறி என்பனவாகும்.

2018 கல்வியாண்டில் மொத்தமாக 252 மாணவர்கள் அவர்களது விடயம் தொடர்பான அறிவைப் பெருக்குவதற்காக டிப்புளோமா கற்கைநெறிகளில் பதிவு செய்திருப்பதுடன், இந்த ஆண்டு காலப்பகுதியில் சான்றிதழ் கற்கைநெறிகளிற்குக் கூட மொத்தமாக 4,562 மாணவர்கள் பதிவுசெய்து கொண்டுள்ளனர். ஆண்டினுள் மனித வள மேம்பாட்டு நிறுவனம் 13 செயலமர்வுகள் நடாத்தியிருந்ததுடன் மொத்தமாக 1,839 மாணவர்கள் தமது அறிவு அனுபவத்தை மேம்படுத்தும் பொருட்டு இந்த செயலமர்வுகளில் பங்கேற்றிருந்தனர்.

மக்கள் ஒரு முற்போக்கு சமூகத்தில் வாழ வேண்டும் என்ற விடயத்தின் மீது கவனம் செலுத்தும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித வள மேம்பாட்டு நிறுவனமான நாம், இரண்டு உன்னத இலக்குகளை செயற்படுத்தியுள்ளோம். அதாவது, தேவையான அளவு மற்றும் தரத்தில் மானிட ஆற்றல்களை வளர்த்தல் மற்றும் கூட்டுத் தெரிவுகள் மற்றும் ஒரு கூட்டு முயற்சியை மேற்கொள்ளுமாறு பணியாளர் மற்றும் மேலாளர் ஆகிய இருதப்பினருக்கும் கல்வியறிவை அளித்தல் என்பனவாகும். கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித வள மேம்பாட்டு நிறுவனமான நாம், ஒரு முற்போக்கான சமுதாயத்தில் வாழ்வதற்கான கனவைக் கொண்டுள்ள மற்றும் ஏனையோருக்கும் வாழ்வதற்கு இடமளிக்கும் உங்கள் அனைவரையும் அந்த கனவினை ஒரு யதார்த்தமாக்கிக் கொள்வதற்காக மனித வள மேம்பாட்டு நிறுவனமான எம்முடன் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.





பேராசிரியர் ஜே.ஏ.எஸ்.கே ஜயகொடி
பணிப்பாளர் மற்றும் கல்விசார் குழுவின் தலைவர

# உள்ளடக்கம


**50 - 53**

**1.** மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு மற்றும் அறிமுகம
1.1 மனித வள மேம்பாட்டு நிறுவனம் பற்றி சுருக்கமாக.
1.2. 2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் பாடநெறிகள்
1.3. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் முகாமைத்துவம்
1.4. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு (2018)
1.5. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கல்விசார் குழு
1.5.1. ம.வ.மே. நிறுவனத்தின் கல்விசார் குழு அங்கத்தவர்கள் (13 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன)
1.5.2. ம.வ.மே. நிறுவனத்தின் கல்விசார் குழுவினால் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை

**54 - 57**

**2.** 2018 இல் நிறுவனத்தின் அபிவிருத்தி மற்றும் அடைவுகள்
2.1. அபிவிருத்தி
2.2. அடைவுகள்
2.2.1. கல்விசார் அடைவுகள
2.2.2. நிர்வாகம்சார் அடைவுகள்
2.2.3. பௌதீக வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்
2.4. மாணவர்களின் ஆற்றல் விருத்தி
2.5. பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் இணைப் பாடவிதான செயற்பாடுகள் (ஏற்பாடு செய்த மற்றும் பங்குபற்றிய)
2.6. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிறுவனம்சார் சமூகப் பொறுப்பு

**58 - 67**

**3.** 2018 ஆம் ஆண்டின் மீளாய்வு
3.1. கற்கைப் பாடநெறிகள்
3.1.1. பட்டப்பின் படிப்பு பாடநெறிகள்
3.1.2. இளமாணிப் பட்டப் பாடநெறிகள்
3.1.2.1. தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறி
3.1.3. நிறைவேற்று டிப்ளோமா பாடநெறி
3.1.4. டிப்ளோமா பாடநெறிகள்
3.1.5. சான்றிதழ் பாடநெறிகள்
3.2. 2018 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்
3.2.1. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் ஆளணிக்கு பயிற்சியளித்தல்
3.3. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய தகவல்கள்
3.4. கல்விசார் ஆளணி, நிர்வாக மற்றும் கல்விசாரா ஆளணி பற்றிய தகவல்கள்
3.5. நூலகம

**72 - 84**

வருடாந்த நிதிக் கூற்றுக்கள் - 2018
1. நிறுவனம்சார் தகவல்கள்
1.1. அறிக்கைப்படுத்தும் நிறுவனம் - நிலையான மற்றும் சட்ட ரீதியான படிவம்
1.2. பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை
1.3. நிதி நடவடிக்கை காலப்பகுதி
2. தயாரிப்பதற்கான அடிப்படை
2.1. தயாரிப்பதற்கான அடிப்படை
2.2. முன்னிலைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாயணம்
2.3. இணக்க அறிக்கை
2.4. நிதிக் கூற்றுக்கான பொறுப்புக்கள்
2.5. நிகழ்கால விடயம்
2.6. அறிக்கைப்படுத்தும் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்
2.7. ஒப்பீட்டு எண்ணிக்கை

2.8. பொருட்கள்சார் மற்றும் திரட்டுதல்
2.9. கவனத்திற்கொள்ள வேண்டிய கணக்கியல் முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்
3. கவனத்திற்கொள்ள வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய பொழிப்பு
3.1. வரிகள்
அ. வருமான வரி
ஆ. உழைக்கும்போது செலுத்தும் வரி
இ. தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி
3.2. நிலையான சொத்துக்கள்
3.3. குறுகிய கால முதலீடுகள்
3.4. தகவல் தொழில்நுட்பத்துடன் சம்பந்தமான சொத்துக்கள்
3.5. வர்த்தகம் மற்றும் ஏனைய அறிடப்பட வேண்டியவை
3.6. பணிக்கொடை
3.7. பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்
3.8. செலவுகளை இனங்காணல்
3.9. நிகழ்காலப் பொறுப்புக்கள்
3.10. கடனாளிகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட செலவுகள்
3.11. எதிர்பாரா பொறுப்புக்கள்
3.12. மூலதன மானியம்
3.13. மீண்டெழும் மானியம்
3.14. வரையறுக்கப்பட்ட நிதியம்
3.15. வருமானத்தை இனங்காணல்
3.16. காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்
2018 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று
2018 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று
2018 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமைகள் /தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று
2018 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
**85 - 87** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் III ஆம் பிரிவின் இலக்கம் 17 (இ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால எதிர்பார்ப்புகள் தொடர்பான அறிக்கை - 2019
**88 - 100** கணக்காய்வு அறிக்கை

# 1. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு மற்றும் அறிமுகம்

வுாந ாளைவழசல ழுக வுாந ஐளெவவைரவந ழக ா்ரஅயெ சுநளழரசஉந யுனஎயஉெநஅநவெ (ஐா்சுயு) மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களிலும் அதிகமாக இருப்பதுடன் அதன் முன்னோடியான 1979 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ், அது 2006 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்டது, 1975 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட தொழிலாளர் கல்வி நிறுவனம் வரை பின் செல்கின்றது. 2006 ஆம் ஆண்டில், தொழிலாளர் கல்வி நிறுவனம் மனித வள மேம்பாட்டு நிறுவனம் என பெயரிடப்பட்டது. பட்டம்இ டிப்ளோமாக்கள்இ சான்றிதழ்இ மற்றும் ஏனைய கல்விசார் பட்டங்களை வழங்க மனித வள மேம்பாட்டு நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்க அதன் கட்டளைச் சட்டம் 2017 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. மனித வள மேம்பாட்டு நிறுவனம், நாட்டின் மிகவும் பழைமையான பல்கலைக்கழகமாகவும் உலகில் உச்ச 1000 பல்கலைக்கழகங்களில் ஒன்றான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒரு நிறுவனமாக உள்ளது.

அதன் சுமார் நான்கு தசாப்த வரலாற்றுக் காலப் பகுதியில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் சுற்றுச்சூழலினுள் பல மாற்றங்களையும் புதிய மேம்பாடுகளையும் கண்டிருக்கின்றது, அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுவதாயின் தனியார்த் துறையின் வளர்ச்சி, அறிவுசார் பொருளாதாரத்தின் தோற்றம் மற்றும் தொழிலாளர் படையின் பூகோளமயமாக்கல் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. இந்த அபிவிருத்திகளை தழுவும் அதன் முயற்சியில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் தொடர்ச்சியாக பரிணாம வளர்ச்சியடைந்து இருப்பதுடன் அதன் அசல் நோக்கம் “வேலை-குழுக்களை கற்பித்தல்” ஒரு புதிய கருத்தினைப் பெற்றிருக்கின்றது. தற்பொழுது உள்ளவாறு “வேலை-குழு” எனக் கருதப்படுவது “முகாமைத்துவம்சார்∴ தொழில்சார் வேலை-குழுக்கள்”, மற்றும், மனித வள மேம்பாட்டு நிறுவனம் “முகாமைத்துவம்சார்∴ தொழில்சார் வேலை-குழுக்களின்” மனித திறனையும் கூட மேம்படுத்துவதற்கு அர்ப்பணித்துள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் நிறுவனமாக, அதன் கல்விசார் செயற்பாடுகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தீவிர கண்காணிப்புக்குட்படுகின்றது. ஆகையால் மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் அனைத்து கல்விசார் அலுவல்களிலும் உயர் தரங்களைப் பேணுவதற்கு கட்டுப்பட்டிருப்பதுடன் எந்த உயர் கற்றல் நிறுவனமும் பேண வேண்டியுள்ள நல்ல பாரம்பரியங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு மனித வள மேம்பாட்டு நிறுவனம் கடமைப்பட்டுள்ளது.

தொழிலாளர் கல்வி நிறுவனம் தொடக்கத்தில் அனைத்து வகையான வேலையாட்களுக்கும் ஒரு பணியாளராக அவர்களுடைய வேலைத் தலத்தில் பயனுறுதியான பங்களிப்பினை வழங்குமாறு அவர்களுடைய பொறுப்புக்களை புரிந்துகொள்ளுதல் மற்றும் அவர்களுடைய திறன்கள், தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்துதற் பொருட்டு ஏற்றுக் கொள்ளத்தக்க தரமான விரிவான உயர் தரமான கல்வி வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் முக்கியமாக 1983 ஆம் ஆண்டு வரை கலை இளமாணி பட்டத்தினை வழங்கியது. எவ்வாறாயினும், 1986 ஆம் ஆண்டில் தொழிலாளர் கல்வி நிறுவனம் தொழிலாளர் கல்வியில் இளமாணிப் (டீடுநு) பட்டத்தை வழங்கத் தொடங்கியது. 2007 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் கல்விசார் நடவடிக்கைகளை விரிவாக்கியதுடன் முதுமாணிப் பட்டங்களையும் கூட வழங்க ஆரம்பித்தது.

## 1.1 மனித வள மேம்பாட்டு நிறுவனம் பற்றிச் சுருக்கமாக

2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் 800 பட்டப்பின் படிப்பு மாணவர்கள் உட்பட 6,000 இற்கும் அதிகமான மாணவ மாணவிகளுக்கு கல்வியை வழங்கியுள்ளது. மனித வள மேம்பாட்டு நிறுவனம், அது அமைக்கப்பட்டதன் நோக்கத்தை கவனத்திற்கொண்டு மாற்றமடையும் கல்வித் திட்டங்களை வழங்குகின்றது. மனித வள மேம்பாட்டு நிறுவனம் பிரதானமாக தொழில் புரிபவர்களுக்கு அவர்கள் தொழில் புரியும் சூழலுக்கு பொருந்தும் வகையில் தமது ஆற்றல்கள், திறமைகள் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்காகவே தனது சேவையை வழங்குகின்றது. 2018 ஆம் ஆண்டில் 04 பாடநெறிகளின் கீழ் 6,000 இற்கும் அதிகமான மாணவ மாணவிகளுக்கு சேவையை வழங்க முடியுமாகியது. மாணவ மாணவிகள் கீழே குறிப்பிடப்படும் பிரகாரம் பாடநெறிகளில் இணைத்துக்கொள்ளப்பட்டனர் : 2018 - 2022 காலப் பகுதிக்கான மூலோபாயத் திட்டத்திற்கு பங்களிப்பை வழங்கியவாறு 05 பட்டப்பின் படிப்புப் பாடநெறிகள், 01 இளமாணிப் பட்டப் பாடநெறி, 04 டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் 08 சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்பட்டன.

மாணவர் பதிவுகள் - 2018




மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

2018 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மொத்தமாக 6,207 மாணவ மாணவிகள் பல்வேறு பாடநெறிகளைப் பயின்றுள்ளனர்.

## 1.2. 2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கற்கைப் புர்டுநேறீகு஌்

**இளமாணிப் பட்டப் பாடநெறி**

- தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறி

**பட்டப்பின் படிப்பு பாடநெறி**

- சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணிப் பட்டப் பாடநெறி
- புவியியல் தகவல் நுட்பத்தில் விஞ்ஞான முதுமாணிப் பாடநெறி
- வணிக முகாமைத்துவ முதுமாணிப் பட்டப் பாடநெறி
- மனித வள முகாமைத்துவ முதுமாணிப் பட்டப் பாடநெறி
- அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு சம்பந்தமான விஞ்ஞான முதுமாணிப் பாடநெறி

**நிறைவேற்று / உயர் டிப்ளோமா மற்றும் டிப்ளோமா பாடநெறி**

- உள வள ஆலோசனை மற்றும் உளவியல் பற்றிய உயர் டிப்ளோமா
- போதைப்பொருள் பாவனை முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா பாடநெறி
- உள வள ஆலோசனை மற்றும் உளவியல் பற்றிய டிப்ளோமா
- மேலதிக மொழியாக தமிழ் மொழி டிப்ளோமா
- தொழிலாளர் கல்வி பற்றிய டிப்ளோமா பாடநெறி

**சான்றிதழ் பாடநெறிகள்**

- கணினி பயன்பாடு பற்றிய சான்றிதழ் பாடநெறி
- ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் பாடநெறி
- ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் பாடநெறி
- பாடசாலையை விட்டுச் செல்பவர்களுக்கான குறுகிய கால ஆங்கிலப் பாடநெறி
- ஆங்கில பேச்சுப் பாடநெறி
- அடிப்படை ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி
- தமிழ் மொழி சான்றிதழ் பாடநெறி - அடிப்படை
- தமிழ் மொழி சான்றிதழ் பாடநெறி - இடைநிலை

சவால்மிக்க உலகளாவிய நிலைமைகளுக்கு முகம் கொடுப்பதற்குப்போன்றே எமது தேசிய அபிவிருத்தியில் மானிட அடித்தளம் வலுவூட்டும் முதிர்ந்த, விவேகமுள்ள “அறிவைப் பயன்படுத்துபவர்கள்” மனித வளத்தினை மேம்படுத்துவதற்கு முழுவதுமாக அர்பணிக்கப்பட்ட சால்புமிகு நிறுவனமாகத் திகழ்வதற்கு மனித வள மேம்பாட்டு நிறுவனம் எதிர்பார்க்கின்றது. இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக மனித வள மேம்பாட்டு நிறுவனம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து மரபுரிமையாகப் பெறப்பட்ட வளமான கல்விசார் பாரம்பரியம் மற்றும் உயர் கல்விசார் தரங்களை உறுதிசெய்தவாறு பாரிய பரிணாமத்திற்கு உட்பட்டு வருகின்றது. அதன் கற்கைநெறிகளுக்காக உள்நாட்டு மற்றும் உலகளாவிய தரப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் நிர்வாகத்தின் தரங்களை பூர்த்திசெய்தல், உயர் கேள்வியைக்கொண்ட அடையாளமாக மற்றும் சமூகம் சார்ந்த பொறுப்புக்களைக்கொண்ட அரச நிறுவனமாக பரிணமித்தல் இந்தப் பரிணாமத்தின் இலக்காகும்.

## 1.3. முனீது வுளு மேும்புர்டுடு நீறுவுனுத்தீனு முகுர்ஜமுதுதுவும்

ஒரு முழுநேர உத்தியோகத்தராகப் பணியாற்றும் நிறுவனத்தின் நிர்வாக மற்றும் கல்விசார் தலைவரான பணிப்பாளர், மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கல்விசார் குழுவின் பரிந்துரையின் பேரில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவையின் அனுமதியுடன் துணைவேந்தரால் நியமிக்கப்படுவார்.

பணிப்பாளர் கல்விசார் குழுவின் தலைவராக, கற்கைகள் சபைகளின் ஒரு பதவிவழி உறுப்பினராக இருக்கின்றார். அவர் நிறுவனத்தின் பிரதான பொறுப்புக் கூறும் அலுவலர் ஆகவும் நிறுவனத்தினுள் ஒழுக்காற்றிற்குப் பொறுப்பான அலுவலராகவும் உள்ளார்.

பேராசிரியர் ஜே.ஏ.எஸ்.கே. ஜயகொடி, கொழும்புப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தில் முகாமைத்துவம் மற்றும் நிறுவன கற்கைகள் துறையில் இணைப் பேராசிரியராக இருப்பபவராவார். 2015 ஆகஸ்ட், 25 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மூன்று வருடங்களுக்கு நிரந்த பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு கீழே குறிபிடப்பட்டுள்ளது

## 1.4. முனீது வுளு மேும்புர்டுடு நீறுவுனுதுதீனு நீருவுர்குமுசுர்ு நீறுவுனுக் குடுடுஜமுப்பு (2018)




அது நிறுவனத்தின் நீண்டகால திட்டத்திற்கு இணங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 1.5. மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் கல்விசார் குழு

மேலே கிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நான்கு கற்கை சபைகளும் கல்விசார் குழுவின் அங்கீகாரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. கற்கை விடயத் துறை மற்றும் குறிப்பிட்ட ஏழு (7) பிரிவுகளும் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

### 1.5.1. கல்விசார் குழு அங்கத்தவர்கள் (13 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது)

| பெயர் | நியமன அதிகாரம |
|---|---|
| பேரா. ஜே.ஏ.எஸ்.கே ஜயக்கொடி | தலைவர் |
| பேரா.பிரேமகுமார டி சில்வா | பதவிவழி நியமன அங்கத்தவர் |
| பேரா.கே.ஆர்.ஆர்.மகானாம | பதவிவழி நியமன அங்கத்தவர் |
| பேரா.எம்.வீ.விதாணபத்திரண | பதவிவழி நியமன அங்கத்தவர் |
| பேரா.கெனடி குணவர்தன | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| பேரா.ஜயதேவ உயன்கொட | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| பேரா.(திருமதி)நயனி மொலகொட | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| பேரா.மஹிந்த சோமதிலக்க *(2019.05.12 வரை)* | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| பேரா.ஓ.எம்.எஸ்.சொய்சா *(2018.05.13 முதல்)* | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| கலாநிதி(திருமதி)தினுகா விஜேதுங்க | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| திரு.டீ.எம்.எஸ்.தசநாயக்க | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| திரு.செல்வகுமாரன் | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| திரு. ஏச்.எம்.என் வரக்காஉல்ல | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| திரு. கே.ஏ விமலேந்திரராஜா | திறைசேரி பிரதிநிதி |
| திரு. ஏ.ஏ.அசீஸ் | கற்கைச் சபை பிரதிநிதி |
| திரு.எம்.ஜீ.ஜீ.ஹேமகுமார | கற்கைச் சபை பிரதிநிதி |
| திருமதி கே.பீ.மாத்தொட்டஆரச்சி | கற்கைச் சபை பிரதிநிதி |
| திருமதி பீ.கே.பி அபேசூரிய | கற்கைச் சபை பிரதிநிதி |

### 1.5.2. மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் கற்கைச் சபைகளினால் நடாத்தப்பட்ட கூட்டங்கள

| கற்கைச் சபை | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| *பட்டப்பின் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி கற்கைச்சபை (2017 நவம்பரில் நிறுவப்பட்டது)* | 09 |
| *இளமாணிப் பட்ட கற்கைகள் தொடர்பான கற்கைச்சபை (2017 டிசம்பரில் நிறுவப்பட்டது)* | 10 |
| மொழிகள் கற்பித்தல் தொடர்பான கற்கைச்சபை | 08 |
| விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கற்கைச்சபை | 09 |

கல்விசார் குழுவுக்கு நேரடியாக பொறுப்புக்கூறும் 04 குழுக்களை நிறுவனக் கட்டமைப்பு கொண்டுள்ளது. அந்தக் குழுக்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| குழு | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கணக்காய்வுக் குழு (ஒரு சுயாதீனக் குழுவாகும்) | 04 |
| நிதிக் குழு | 10 |
| நூலக குழு | 03 |
| தரப் பாதுகாப்புக் குழு | 01 |

# 2. 2018 இல் நிறுவனத்தின் அபிவிருத்தி மற்றும் அடைவுகள்

## 2.1. அபிவிருத்திகள

- இளமாணிப் பட்டத் தேர்வுநாடிகளுக்கு மிகவும் விரிவான வாய்ப்பை வழங்கியவாறு தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறியின் பாடத் திட்டத்தை நான்கு (04) வருட சிறப்புப் பட்டமாக திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- டிப்ளோமா, இளமாணிப் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் கல்விசார் மற்றும் நிர்வாகம்சார் அலுவல்களுக்கு கற்றல் முகாமைத்துவ முறைமையை (Learning Management System) பயன்படுத்துவதனை மேம்படுத்தப்பட்டது. இந்த வசதி கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளின்போது கடதாசிப் பாவனையைக் குறைப்பதுடன் அறிக்கைகளைப் பேணிவருவதற்கும் துணை புரியும்.
- நிலையான சொத்துக்கள் பதிவேடு அனைத்து பொருட்கள் பட்டியலுடனும் கணனிமயப்படுத்தப்பட்டது.
- முன்மொழியப்பட்டுள்ள விரிவுபடுத்தப்பட்ட மனித வள மேம்பாட்டு நிறுவனக் கட்டிடத்தை பூரணப்படுத்தல் மற்றும் நிர்வாக மற்றும் நிதிப் பிரிவை அதில் நிறுவுதல்.
- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கேட்போர்கூடத்தின் பழுதுபார்ப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டமை.
- தற்போது அமுல்படுத்தப்படும் 1970 இன் 11 ஆம் இலக்க மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நெறிமுறைகள் 2018 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டதுடன் மீளமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 2.2. அடைவுகள

### 2.2.1. கல்விசார் அடைவுகள

2018 ஆம் ஆண்டாகும்போது மனித வள மேம்பாட்டு நிறுவனம் 04 பிரிவுகளின் கீழ் சுமார் மூவாயிரம் (3000) தகுதி பெற்ற பட்டதாரிகளை உருவாக்கியது.

அது, பல்வேறுபட்ட விடயத்துறைகளின் முன்னூற்று ஏழு (307) பட்டப்பின் பட்டதாரிகள், நூற்று முப்பத்தேழு (137) பட்டதாரிகள், நூற்று அறுபத்தாறு (166) டிப்ளோமாதாரிகள் ∴ உயர் டிப்ளோமாதாரிகள் மற்றும் இரண்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்றொ (2,297) சான்றிதழ்தாரிகளை கொண்டிருக்கின்றது.

| | |
|---|---|
| 42% | பட்டப்பின் படிப்பு பாடநெறி |
| 21% | இளமாணிப் பட்டப் பாடநெறி |
| 46% | டிப்ளோமா பாடநெறி |
| 50% | சான்றிதழ் பாடநெறி |




- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் வருடாந்த டிப்ளோமா விருது வழங்கும் வைபவம் 2018 ஜுன் 18 ஆந் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்பட்டமளிப்பு விழாவில் முன்னூற்று எழுபத்தி மூன்று (373) பேருக்கு டிப்ளோமா பட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

- கற்பித்தல் முறைகள்∴ பாடத் திட்டங்கள் மேம்பாடு சம்பந்தமான பயிற்சி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

  - "கலப்பு கற்றல் ஆய்வு, மேம்பாடு மற்றும் நடைமுறைப்படுத்தல் (Exploration, Development and Implementation of Blended Learning)" பற்றிய முதலாவது செயலமர்வு.

  - "கலப்பு கற்றல் ஆய்வு, மேம்பாடு மற்றும் நடைமுறைப்படுத்தல் பகுதி - II (Exploration, Development and Implementation of Blended Learning)" பற்றிய இரண்டாவது செயலமர்வு

  - ஆங்கிலப் பாடநெறிக்கான "ஆசியரியர் பயிற்சி" மூன்றாவது செயலமர்வு சிறப்பாக நடாத்தப்பட்டது

- கைத்தொழிலின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கற்கைப் பாடநெறிகளின் பாடத் திட்டங்கள் மற்றும் இடைக்காலச் சட்டங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டதுடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் அனைத்து திருத்தங்களும் அங்கிகரிக்கப்பட்டன. அவை பின்வருமாறு
  - சுற்றுலாத்துறை வர்த்தக நிகழ்வுகள் மற்றும் உபசரணை முகாமைத்துவம் பற்றிய நிறைவேற்று டிப்ளோமா
  - உளவள ஆலோசனை பற்றிய உயர் டிப்ளோமா
  - உளவள ஆலோசனை பற்றிய டிப்ளோமா
  - போதைப் பொருட்கள் பாவனை முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா

  வுகீழ் குறிப்பிடப்படும் பட்டப் பாடநெறிகள் மறுசீரமைக்கப்பட்டன.

  - மனித வளங்கள் முகாமைத்துவம் பற்றிய பட்டப்பின் பாடநெறி
  - வணிக முகாமைத்துவம் பற்றிய பட்டப்பின் பாடநெறி
  - அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு பற்றிய பட்டப்பின் பாடநெறி

- ஆரம்ப மற்றும் உயர் மட்டப் பாடநெறிகளின் தமிழ் மொழி பாடநெறிக் கையேட்டின் பாடத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

- ஆரம்ப மற்றும் உயர் மட்டப் பாடநெறிகளின் ஆங்கில மொழி பாடநெறிக் கையேட்டின் பாடத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

- கற்பித்தல் மற்றும் கற்றலை மதிப்பீடு செய்யும் (வுடுயுளு) அலுவலுக்கிணங்க எதிர்பார்க்கப்படும் கற்பித்தல் பெறுபேறு (ஐடுழு) உள்ளடக்கப்படல்

### 2.2.2. நிர்வாக அடைவுகள

- மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் சர்வதேச ஒத்துழைப்புப் பிரிவொன்று தாபிக்கப்பட்டது. மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கான அலுவல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- ஆராய்ச்சி சார்ந்த கற்றலுக்கான ஊக்கி (A catalyst for experimental learning) எனும் மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

- அனைத்து சேவைப் பிரிவுகளுக்குமான ஆட்சேர்ப்புக்கள். 2018 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் பிரிவுகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டது.

  - விரிவுரையாளர் (பயிலுனர்) - 01
  - பிரதிப் பதிவாளர் - 01
  - முகாமைத்துவ உதவியாளர் - 02
  - முகாமைத்துவ உதவியாளர் களஞ்சியப் பொறுப்பாளர் - 01 (இடமாற்றல்)
  - சாரதி தரம் - ஐஐ - 01

- 2018 ஆம் ஆண்டில் ஆளணியின் சேவைத் தரத்தை அதிகரிக்கும் நோக்கில் 07 பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் (செயலமர்வுகள்) வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. இது தவிர கல்வி, நிர்வாகம், மற்றும் எழுதுநர் ஆளணியின் தெரிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் 15 தொழில் அபிவிருத்திக்கான பல்வேறு செயலமர்வுகள் கலந்துகொண்டனர்.

### 2.2.3. பௌதீக வசதிகளைப் பெற்றுக்கொள்ளல

- 2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்திற்கு அதன் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளின் 90மூ ஆன முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியுமாகியது. 2018 ஆம் ஆண்டில் நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவுக் கட்டிடத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பகுதி இணைக்கப்பட்டது.

- 2018 ஆம் ஆண்டில் நவீன கணனிப் பாகங்களுடன் நவீனமயப்படுத்தப்பட்ட கணனி ஆய்வுகூடம் அமைக்கப்பட்டது.

- நவீன வீடியோப் பதிவு உபகரணங்களுடனான கேட்போர்கூடத்தை நவீனமயப்படுத்தல் அலுவல்கள்2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பிரிவுகளுக்கு புதிய மரத் தளபாடங்கள்மற்றும் அத்தியாவசிய வசதிகள் வழங்கப்பட்டன.

### 2.4. மாணவர்களின் ஆற்றல் விருத்தி

முகாமைத்துவம் மற்றும் இடை மட்ட முகாமைத்துவம்

- 2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம், வியட்னாம் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் வணிக முகாமைத்துவம் மற்றும் மனித வங்கள் முகாமைத்துவம் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்காக சர்வதேச செயலமர்வொன்றை வெற்றிகரமாக நடாத்தியது. செயலமர்வின் இலக்கு, வியட்னாமின் "பல்தேசியக் கம்பனிகளின் வர்த்தக மூலோபாயங்கள்" சம்பந்தமாக மாணவர்களின் அறிவை விருத்தி செய்வதாகும். இந்த செயலமர்வில் 86 மாணவர்கள் பங்குபற்றினர்.

- ஐமனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்படும் முகாமைத்துவம் மற்றும் இடைமட்ட முகாமைத்துவத் திட்டத்தை பயிலும் மாணவர்களுக்காக 05 செயலமர்வுகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. செயலமர்வில் 303 மாணவர்கள் பங்குபற்றினர். இந்த செயலமர்வின் இலக்கு மாணவர்களின் உயர்கல்வியுடன் சம்பந்தப்பட்ட தலைப்புக்கள் தொடர்பாக அவர்களது மென் திறன்களை விருத்தி செய்வதாகும்.

- உள வள ஆலோசனை மற்றும் உள நலம் சம்பந்தமான டிப்ளோமா / உயர் டிப்ளோமா பாடநெறியைப் பயிலும் மாணவர்களுக்காக 02 களச் சுற்றுப் பயணங்களை நடாத்துவதற்கு மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் முடியுமாகியது. கல்விசார் களச் சுற்றுலா மாணவ மாணவிகளுக்கு அவர்களது நடைமுறை அறிவை விருத்தி செய்வதற்கு பெரும் துணையாக இருக்கும். இதில் 96 மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

இளமாணிப் பட்ட மட்டம்

2018 இல் தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறியை பயிலும் மாணவர்களுக்கு 04 செயலமர்வுகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. (02 வதிவிட செயலமர்வுகள் மற்றும் 02 ஒரு நாள் செயலமர்வுகள் உள்ளடங்கலாக)

இந்த செயலமர்வுகளின நோக்கம், இளமாணிப் பட்டத் தேர்வுநாடிகளின் ஆராய்ச்சிக்கான வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குவதும் அவர்களது முன்னிலைப்படுத்தல் ஆற்றல்களை மேம்படுத்துவதுமாகும். செயலமர்வில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 714 ஆகும்.

தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறி செயலமர்வுகள் தொடர்பான விபரங்கள்

*தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறிக்கு "SPSS"(III ஆம் பகுதி) மூன்று நாள் செயலமர்வில் 111 மாணவ மாணவிகள் பங்குபற்றினர்.*

*கலப்புக் கற்றல் ஆய்வு அபிவிருத்தி மற்றும் செயற்படுத்தல் (Exploration Development and Implementation of Blended Learning) சம்பந்தமான செயலமர்வில் 200 மாணவ மாணவிகள் பங்குபற்றினர்.*

*கலப்புக் கற்றல் முறையை நடைமுறைப்படுத்தல் (Implementation of Blended Learning) சம்பந்தமான ஒரு நாள் செயலமர்வில் 200 மாணவ மாணவிகள் பங்குபற்றினர்.*

*முகாமைத்துவ முன்னிலைப்படுத்தல் கோட்பாடுகள் (Fundamentals of Management Presentation) சம்பந்தமான இரண்டு நாள் செயலமர்வில் 203 மாணவ மாணவிகள் பங்குபற்றினர்.*

## 2.5. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் மாணவர்கள் மற்றும் ஆளணியின் இணைப் பாட விதானச் செயற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்ட மற்றும் கலந்துகொண்ட)

- தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறியின் இரண்டாம் வருட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆளுமை விருத்தி மற்றும் உடல் நலப் பாதுகாப்பு சம்பந்தமான "CEAT Saksham" நிகழ்ச்சியில் பட்டப் பாடநெறியின் இரண்டாம் வருட மாணவர்கள் பங்குபற்றினர்.
- தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறியின் பகுதி - I மாணவர்களால் தர்ம போதனை புண்ணியகருமமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.
- தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறியின் முதலாம் வருட மாணவர்களால் "பெதுரு சாஜ்ஜய" எனும் இசை நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.
- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் ஆங்கில மொழிப் பிரிவினால் 2019 ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி "ஆங்கில மொழி தினம்" நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.





## 2.6. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் சமூகம்சார் பொறுப்பு

**மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் அனைத்து மட்டத்திலுமான மாணவ மாணவிகளுடன் நிறுவனத்தின் சமூகம்சார் பொறுப்பு (CSR) செயற்பாடுகளில் பங்குபற்றியது.**

மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் ஆளணி தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறி மாணவர்களுடன் அம்பாறை தீகவாபி கல்லூரி மாணவர்களின் தேவைகளுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்காக "சிப்சத்தரட்ட அருனெல்லக் (கல்விக்கான ஒளிக்கீற்று)" எனும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழச்சியின் கீழ் கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களை நிறைவு செய்துகொள்வதற்கு நிறுவனத்திற்கு முடியுமாகியது;

- பழைய நூலகம் மற்றும் விளையாட்டு மைதானத்தை நவீன மயப்படுத்தியமை.
- நூலகத்திற்கான நூல்கள் மற்றும் புத்தக இராக்கைகளை வழங்கியமை.
- மாணவ மாணவிகளுக்கு அன்றாட பாடசாலை நடவடிக்கைகளுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் ஏனைய தேவைகளை வழங்கப்பட்டமை.

**கண்களைத் திறந்திடுவோம**

- தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறி மாணவர்கள் 2018 செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் சுகாதார முகாமொன்றை நடாத்தினர். இரத்த தானம் உட்பட பல்வேறு சுகாதாரத்துடன் தொடர்பான பரீசோதனைகளை மேற்கொள்ளும் நோக்குடன் இது பொது மக்களுக்கு திறந்துவிடப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் 07 அரசாங்கப் பாடசாலைகளுக்கு மற்றும் இலங்கை இராணுவப் படைக்கு மற்றும் விசேட அதிரடிப் படைக்கு அலுவலக உபகரணங்கள் மற்றும் எனைய உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களிடையே 145 அலுவலக உபகரணங்களும் 56 ஏனைய உபகரணங்களும் காணப்பட்டன. பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| நிறுவனம் | அலுவலக உபகரணங்கள | ஏனைய உபகரணங்கள |
|---|---|---|
| யுஅம். / வேலுசுமன வித்தியாலயம், அம்பாறை. | 33 | - |
| மே.மா./ கம்./ கலஹிடியாவ ம.கல்லூரி, கனேமுல்ல | 03 | - |
| மே.மா./ கள./ ஸ்ரீ ஞானிஸ்ஸர இரண்டாம்நிலை ம.வி. | 42 | 2 |
| அம்./ தீகவாபி சிங்கள ம.வி. | 25 | - |
| கொ./ ராஜசிங்க ம.வி., தெமட்டகொட. | - | 2 |
| இலங்கை இராணுவப் படை | 11 | 52 |
| விசேட அதிரடிப் படை | 31 | - |
| மொத்தம் | 145 | 56 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

3. 2018 ஆம் ஆண்டின் மீளாய்வு

## 3.1. கற்கைப் பாடநெறிகள

2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் 05 பிரிவுகளின் கீழ் 17 கற்கைப் பாடநெறிகளை நடாத்தியது.

- பட்டப்பின் படிப்பு பாடநெறிகள்
- இளமாணிப் பட்டப் பாடநெறிகள்
- தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறி
- நிறைவேற்று டிப்ளோமா பாடநெறி
- டிப்ளோமா பாடநெறிகள்
- சான்றிதழ் பாடநெறிகள்

### 3.1.1. பட்டப்பின் படிப்பு பாடநெறிகள

2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு விடயத் துறைகளில் மிகவும் முக்கியமான ஐந்து பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை வழங்கியது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் குறிக்கோள் அவர்களுக்கு பொருத்தமான துறைகளில் தொழில் வாண்மையாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை மேம்படுத்துவதாகும்.

மனித வள மேம்பாட்டு நிறுவனம் முகாமைத்துவ கற்கைகளுடன் தொடர்புபட்ட மூன்று பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி வருகின்றது. முகாமைத்துவ தொழில்களில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் அனைத்து முக்கிய முகாமைத்துவ பிரிவுகளிலும் அறிவு மற்றும் விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் இதனூடாக அதிக நம்பிக்கையுடன் வியாபார பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதற்கு தேவையான எண்ணக்கருத்தியல் மற்றும் பகுப்பாய்வு கருவிகள் உருவாக்கப்படுகின்றன.

புவித்தகவலியல் மற்றும் அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு போன்ற விடயத் துறைகளில் விஞ்ஞான முதுமாணிப் பாடநெறிகள் இரண்டை நிறுவனம் நடாத்தியது. இந்த பாடநெறிகள், புவித்தகவலியலில் மற்றும் அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு போன்ற துறைகளில் சிறப்புத் தேர்ச்சி தேவையான மாணவ மாணவிகளுக்கு அந்தப் பிரிவுகளில் வளங்களை மதிப்பீடு செய்தல், மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் வளங்கள் முகாமைத்துவம் என்பவற்றுக்காக திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் 04 பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை மாத்திரமே நடாத்த முடியுமாகியது. உரிய அதிகாரிகளின் அனுமதியுடன் புவித் தகவலியல் விஞ்ஞான முதுமாணிப் பாடநெறி தவிர ஏனைய 04 பட்டப்பின் பாடநெறிகளுக்கு மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்பட்டனர்.

வணிக முகாமைத்துவம் பற்றிய முதுமாணிப் பட்டத்தை அதிகமான மாணவர்கள் பயிலுகின்றனர். பல்வேறு சேவைப் பிரிவுகளில் பணி புரிபவர்கள் சேவைகள் முகாமைத்துவம் பற்றிய முதுமாணிப் பட்டத்தை பயிலுவதற்கு ஆர்வம் காட்டுவதுடன், அது மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாவது அதிகமான மாணவர்கள் பயிலும் முதுமாணிப் பாடநெறியாகும்.

பட்டப்பின் படிப்பு பாடநெறிகளில் மாணவர் செயற்திறன்
2014-2018




| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடாந்த அனுமதி | | | | | பட்டதாரிகள | | | | |
| வணிக முகாமைத்துவம் பற்றிய பாடநெறி | 160 | 172 | 61 | 95 | 115 | 77 | 87 | 0 | 127 | 125 |
| மனித வளங்கள் முகாமைத்துவம் பட்டப்பின் படிப்பு பாடநெறி | 146 | 135 | 67 | 54 | 67 | 113 | 85 | 93 | 135 | 96 |
| சேவைகள் முகாமைத்துவம் விஞ்ஞான முதுமாணி பாடநெறி | 112 | 121 | 66 | 0 | 77 | 0 | 43 | 88 | 54 | 62 |
| புவித் தகவலியல் விஞ்ஞான முதுமாணி பாடநெறி | 51 | 0 | 83 | 0 | 0 | 7 | 7 | 62 | 54 | 5 |
| அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு பற்றிய விஞ்ஞான முதுமாணி பாடநெறி | 50 | 0 | 0 | 0 | 48 | 0 | 25 | 26 | 38 | 11 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

## 3.1.2. இளமாணிப் பட்டப் பாடநெறி

### 3.1.2.1 தொழிலாளர் கல்வியியல் இளமாணிப் பட்டம

மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று "தேவையான அளவில் மற்றும் தரமான மானிட ஆற்றல்களை விருத்தி செய்வதும் கூட்டுப்பொறுப்பு மற்றும் முயற்சிக்காக ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கு தேவையான கல்வியை வழங்குதல்" ஆகும். அதற்கமைய, தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறி மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் 39 வருடங்களாக அரசாங்க நிதி அனுசரணையைப் பெற்றுக்கொள்ளும் ஒரே பட்டப் பாடநெறியாகும்.

தொழிலாளர் கல்வியியல் பட்டப் பாடநெறியின் காலம் 06 செமஸ்டர்களைக் கொண்ட மூன்று வருடங்களாகும். தொழிலாளர் கல்வி சம்பந்தமான டிப்ளோமா பாடநெறியின் காலப் பகுதி ஒரு வருடமாகும். பட்டப் பாடநெறியில் நேரடியாக பதிவுசெய்துகொள்வதற்காக தகைமையைப் பெற்றுக்கொள்ளாத தேர்வுநாடிகளுக்கு ஒரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பயிலுவதற்காக வாய்ப்பு வழங்கப்படும். அனுமதி பெறுவதற்கான அளவுகோலாக இரண்டு திட்டங்களுக்கும் களப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஏற்புடையதாகும்.

2018 ஆம் ஆண்டில் 575 விண்ணப்பதாரிகள் தெரிவு செய்வதற்கான பரீட்சைக்கு விண்ணப்பித்ததுடன் அவர்களிடையே பாடநெறிக்காக 38மூ ஆன எண்ணிக்கையினர் தெரிவு செய்யப்பட்டனர். இளமாணிப் பட்டத்திற்காக 221 பேர் பதிவு செய்துகொண்டனர். பாடநெறிகளை ஆரம்பித்துவைக்கும் வைபவம் 2018 ஆகஸ்ட் முதலாம் திகதிகொழும்புப் பல்கலைக்கழகத்தின் புதிய கலையரங்கத்தில் நடாத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் இந்தப் பாடநெறிகளில் பல்வேறு மட்டங்களில் பதிவு செய்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 522 ஆகும். 2014 முதல் கடந்த 05 வருட காலப் பகுதிக்கான பகுப்பாய்வுக்கமைய பட்டதாரிகளின் உருவாக்கத்தின் சராசரி 2018 இல் 69.6மூஆக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இளமாணிப் பட்டப் பாடநெறி மற்றும் தொழிலாளர் கல்வியியல் டிப்ளோமா பாடநெறியின் மாணவர் செயற்திறன்
2014-2018




| | வருடாந்த அனுமதி | | | | | பட்டதாரிகள | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| தொழில் கல்வியியில் பட்டம | 206 | 157 | 194 | 184 | 221 | 153 | 119 | 124 | 137 | 137 |
| தொழில் கல்வியியில் டிப்ளோமா | 59 | 51 | 54 | 48 | 66 | 37 | 42 | 32 | 30 | 36 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

### 3.1.3. நிறைவேற்று டிப்ளோமா பாடநெறி

நிறைவேற்று டிப்ளோமா என்றால் ஏற்புடைய பணித் துறையில் ஈடுபட்டுள்ள தொழில் வாண்மையாளர்களுக்கு ஒரு தனிப்பட்ட தகைமையாக உள்ளது. இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோள் முகாமையாளர்களுக்கு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட துறைகளில் அவர்களின் அறிவனை இற்றைப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்குமான சந்தர்ப்பங்களை வழங்குவதாகும். இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் அவர்களின் அறிவினை மேம்படுத்த நாடும் நடுத்தர நிறைவேற்றுனர்களுக்குகாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றது.

அனைத்து நிறைவேற்று டிப்ளோமா பாடநெறிகளைப் பயிலுபவர்கள் அவர்களுடைய வாடிக்கையாளர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்போது அடிப்படையாக தமது நடத்தை முறைகளுக்கு சவால்விடும் சொந்த அனுபவங்களை கொண்டிருப்பது அத்தியாவசியமாக இருக்கின்றது என்ற உறுதியான நம்பிக்கையில் வேரூன்றியுள்ளதன் அடிப்படையில் தனி நபர் அபிவிருத்தியை மையமாகக் கொண்டுள்ளது.

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் அனைத்துப் பாடநெறிகளையும் முறைப்படுத்தும் நோக்கில் அனைத்து நிறைவேற்று டிப்ளோமா பாடநெறிகளும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் மாத்திரமே 2017 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் உள வள உளவியல் சம்பந்தமான உயர் டிப்ளோமா பாடநெறி 48 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.

நிறைவேற்று டிப்ளோமா பாடநெறியின் மாணவர் செயற்திறன்
2014-2018



| | வருடாந்த அனுமதி | | | | | தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| மனித வளங்கள் முகாமைத்துவம் பற்றிய நிறைவேற்று டிப்ளோமா | 97 | 113 | 35 | 0 | 0 | 34 | 61 | 81 | 0 | 35 |
| * கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய நிறைவேற்று டிப்ளோமா | 0 | 31 | 0 | 0 | 0 | 0 | 13 | 0 | 17 | 0 |
| அனர்த்த பகுப்பாய்வு முகாமைத்துவம் பற்றிய நிறைவேற்று டிப்ளோமா | 43 | 0 | 0 | 0 | 0 | 25 | 0 | 23 | 0 | 0 |
| * சேவை முகாமைத்துவம் பற்றிய நிறைவேற்று டிப்ளோமா | 83 | 94 | 107 | 0 | 0 | 50 | 59 | 51 | 0 | 115 |
| சுற்றுலா நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்ளோமா | 0 | 35 | 0 | 0 | 0 | 0 | 0 | 34 | 0 | 0 |
| உள வள உளவியல் சம்பந்தமான உயர் டிப்ளோமா | 0 | 0 | 0 | 0 | 48 | 0 | 0 | 0 | 0 | 0 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

* தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டது.

### 3.1.4. டிப்ளோமா பாடநெறிகள்

மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் மூன்று (03) வகையான டிப்ளோமாக்கள் வழங்கப்படுகின்றன. இது முகாமைத்துவம், மானுடவியல் மற்றும் மொழி ஆகிய பாடநெறிகளைக் கொண்டுள்ளன. இப் பாடநெறிகள் ஆரம்ப மட்ட பணியாளர்களுக்கு அவர்களின் குறித்த துறைகளில் மேம்பட்ட அறிவு, பகுப்பாய்வுச் சிந்தனை, திறன்களை கட்டியெழுப்புதல், நெறிமுறைத் தரநிலைகள் மற்றும் தலைமைத்துவம் மற்றும் பொறுப்புக்களை மேம்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு வடிவமைக்கப்படுகின்றன. இந்த டிப்ளோமாக்கள் வித்தியாசமான மாணவர்களுக்கு அவர்களின் பல்வேறு தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு அனுகூலமானதாக உள்ளன. சில சமயங்களில் இது கல்விசார் கற்கையின் பல்வேறு அவத்தைகள் அல்லது மேலதிக தொழில் வாண்மைப் பயிற்சிகள் மற்றும் தகமைகளை வழங்குவதற்கும் இடையேயான இடைவெளியை நிரப்புவதற்கு ஒரு பாலமாக சேவையாற்றுகின்றது. ஒரு டிப்ளோமா பாடநெறியானது பெறுமதியான சிறப்படைந்த திறன்கள், அறிவு, மற்றும் அனுபவங்களை வழங்குகின்றது.

கல்விசார் பாடநெறிகளை முறைப்படுத்துவதற்காக வருடத்தினுள் வெளித்தரப்பினருடன் சில ஒத்துழைப்பு ரீதியிலான திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன. இந்தப் பிரச்சினை காரணமாக நான்கு டிப்ளோமா பாடநெறிகளுக்கு மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில்இந்தப் பாடநெறியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 02 டிப்ளோமா பாடநெறிகளுக்கு மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். அவையாவன, மேலதிக மொழியாக தமிழில் டிப்ளோமா மற்றும் உள வள உளவியல் பற்றிய டிப்ளோமா ஆகியவைகளாகும். அது 2018 ஆம் ஆண்டில் 69மூ அனுமதித்துக்கொள்ளல் வளர்ச்சியாகும்.

டிப்ளோமா பாடநெறிகளின் மாணவர் செயற்திறன்
2014 - 2018




| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடாந்த அனுமதி | | | | | தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
| * சேவை முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா | 74 | 58 | 20 | 0 | 0 | 64 | 23 | 37 | 0 | 27 |
| போதைப் பொருள் பாவனை முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா | 0 | 50 | 0 | 0 | 0 | 25 | 0 | 0 | 0 | 27 |
| உள வள ஆலோசனை உளவியல் பற்றிய டிப்புளோமா | 50 | 34 | 0 | 0 | 48 | 25 | 36 | 23 | 55 | 29 |
| மேலதிக மொழியாக தமிழில் டிப்ளோமா | 120 | 163 | 124 | 96 | 90 | 0 | 124 | 123 | 100 | 74 |
| * முகாமைத்தும் பற்றிய டிப்ளோமா | 0 | 22 | 34 | 0 | 0 | 0 | 11 | 10 | 0 | 27 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

* தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டது.

### 3.1.5. சான்றிதழ் பாடநெறிகள

மனித வள மேம்பாட்டு நிறுவனம் தொழில் வாண்மை வளர்ச்சியை நோக்கி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களுக்கு பல்வேறு துறைகளில் சான்றிதழ் பாடநெறிகளை வழங்குகின்றது. 2018 ஆம் ஆண்டில் எட்டு (08) சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்பட்டன. மனித வள மேம்பாட்டு நிறுவனம் 30 வருடங்களுக்கு மேலாக ஆங்கிலத்தில் சான்றிதழ் மட்ட கற்கைநெறிகளை வழங்கி வருகின்றது. ஆங்கில மொழி தொடர்பில் பல்வேறு மட்டங்களில் 05 பாடநெறிகள் காணப்படுகின்றது. சான்றிதழ் பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களிடையே 80% ஆன மாணவர்கள் ஆங்கில மொழி பாடநெறிகளில் பதிவு செய்துகொண்டுள்ளனர். அது தவிர தமிழ் மொழி பாடநெறி, முகாமைத்துவம் பற்றிய பாடநெறி மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய பாடநெறி நடாத்தப்படுகின்றன.

**சான்றிதழ் பாடநெறிகளின் மாணவர் செயற்திறன் 2014-2018**




| | வருடாந்த அனுமதி | | | | | தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி | 2206 | 2149 | 1321 | 1321 | 2283 | 1665 | 1688 | 0 | 986 | 1523 |
| ஆங்கில மொழி அடிப்படை பாடநெறி | 259 | 187 | 217 | 0 | 413 | 132 | 120 | 0 | 143 | 269 |
| ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி | 99 | 99 | 67 | 0 | 48 | 67 | 62 | 0 | 55 | 25 |
| பேச்சு ஆங்கிலம் சான்றிதழ் பாடநெறி | 1707 | 1705 | 3637 | 1933 | 580 | 544 | 1261 | 2706 | 1471 | 0 |
| பாடசாலையை விட்டு விலகிய வர்களுக்கான ஆங்கில மொழி குறுகியகால பாடநெறி | 215 | 251 | 130 | 54 | 342 | 45 | 314 | 0 | 45 | 101 |
| கணினி பயன்பாடுகள் சான்றிதழ் பாடநெறி | 549 | 354 | 452 | 0 | 412 | 213 | 246 | 320 | 336 | 275 |
| தமிழ் மொழி சான்றிதழ் பாடநெறி - அடிப்படை | 658 | 316 | 341 | 405 | 327 | 0 | 411 | 242 | 203 | 0 |
| தமிழ் மொழி சான்றிதழ் பாடநெறி - இடைநிலை | 322 | 262 | 160 | 145 | 157 | 0 | 200 | 159 | 109 | 104 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

## 3.2. 2018 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகள் பற்றிய விபரங்கள

மனித வள மேம்பாட்டு நிறுவனத்தில், பட்டப்பின், இளமாணி மற்றும் டிப்ளோமா பாடநெறிகளைப் பயிலும் மாணவர்கள் ஏற்புடைய கற்கை பாடநெறிகளின் கட்டாய அங்கமாக பயிற்சி செயலமர்வொன்றில் பங்கேற்க வேண்டியிருக்கின்றது. இந்த பாடநெறிகளின் நோக்கம் மாணவர்களின் தொழில்சார் மேம்பாடாகும். விரிவுரைகள் போலல்லாது, செயலமர்வுகள் தொழில்சார் உலகத்திற்குத் தொடர்பான கலந்துரையாடல்களுக்கு ஒரு களத்தினைத் திறப்பதற்கும் - கலந்துரையாடல்களை ஊக்குவிக்கின்றன. பங்கேற்பாளர்களுக்கு ஒரு பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பில் அவர்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்ள முடியும். புதிய திறன்களை மேம்படுத்திக்கொள்வதற்கு செயலமர்வுகள் உதவியாக இருப்பதுடன், அது மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உதவும். மாணவர்கள் அவர்களுடைய முன்னிலைப்படுத்தும் திறன்கள், தலைமைத்துவம், தொடர்பாடல் மற்றும் குழுப் பணித் திறன்கள் முதலியனவற்றினை மேம்படுத்திக்கொள்ள முடியுமாக இருக்கும்.

இந்தத் திட்டங்களின் நோக்கம், தொடர்பாடலில் ஆரம்பித்து பல்வேறு சூழல்களில் சேவையாற்றுதல், உணர்வுபூர்வமாக சிந்திக்கும் திறனை மேம்படுத்தல், படைப்பாற்றல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானம் எடுத்தல், பணியாற்றுவது எப்படி என்பது சம்பந்தமாக அறிந்துகொள்ளல் மற்றும் பொது மக்களுடனான கலந்துரையாடல்களை மேம்படுத்தல், மன அழுத்தம் மற்றும் மோதல்களை தவிர்த்தல் போன்ற விரிவான வீச்சில் பரந்திருக்கும் மென்திறன்களை விருத்தி செய்வதாகும்.

2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் மாணவ, மாணவிகளின், அரச ∴ தனியார் துறையில் பணியாற்றுபவர்களின் அறிவு, திறன்கள், மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நோக்கில் பட்டப்பின், இளமாணிப் பட்ட, மற்றும் டிப்புளோமா பாடநெறிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு 13 பயிற்சி செயலமர்வுகள் (சர்வதேச செயலமர்வுகள் உட்பட) நடாத்தப்பட்டது.

| பாடநெறி | தலைப்பு | பங்குபற்றியோரின் எண்ணிக்கை | திகதி |
|---|---|---|---|
| சேவைகள் முகாமைத்துவம் பற்றிய விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | SPSS செயலமர்வு | 64 | 2018 ஜனவரி 6 மற்றும் 13 |
| மனித வளங்கள் முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் | மூலோபாய முகாமைத்துவம் | 53 | 2018 மே 13 மற்றும் 14 |
| தொழிலாளர் கல்வியியல் பட்டம் | “கலப்புக் கற்றல் முறையின் ஆய்வு, மேம்பாடு மற்றும் செயற்படுத்தல்” செயலமர்வு | 222 | 2018 மே 30 |
| புவித்தகவலியல் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | Arial Mapping Survey | 68 | 2018 ஜூன் 3 மற்றும் 4 |
| சேவைகள் முகாமைத்துவம் பற்றிய விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | வாடிக்கையாளர் தலைமை முகாமைத்துவம் | 45 | 2018 ஜூலை 28 மற்றும் 29 |
| தொழிலாளர் கல்வியியல் பட்டம் | கலப்புக் கற்றல் முறையை செயற்படுத்தல் செயலமர்வு | 222 | 2018 செப். 4 |
| சர்வதேச செயலமர்வு - வியட்னாம் (கருத்திட்ட முகா. முதுமாணிப் பட்டம் / மனி. வள. முகாமைத்துவ முதுமாணிப் பட்டம்) | வியட்னாமில் நடைபெற்ற பல்தேசியக் கம்பனிகளின் வணிக மூலோபாயங்கள் | 86 | 2018 ஒக். 1 முதல் 3 வரை |
| ஆங்கில மொழிப் பாடநெறி | ஆங்கில மொழி தினம் | 500 | 2018 ஒக். 21 |
| சேவைகள் முகாமைத்துவம் பற்றிய விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | சேவைகள் முகாமைத்துவப் பயன்பாடுகள் | 73 | 23சன ளு 24வா ழோளநஅடிநச 2018 |
| தொழிலாளர் கல்வியியல் பட்டம் | “முகாமைத்துவக் கோட்பாடுகள்” பற்றிய செயலமர்வு | 203 | 2018 நவம்பர் 25 மற்றும் 26 |
| தொழிலாளர் கல்வியியல் பட்டம் | SPSS அமர்வு | 111 | 2018 டிசம்பர் 3இ5இ மற்றும் 6 |
| உள வள ஆலோசனை டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா | உள நலச் சுகாதாரம் பற்றிய தேசிய நிறுவனத்திற்கான கல்விச் சுற்றுலா | 96 | 2018 டிசம்பர் 29 |
| உள வள ஆலோசனை டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா | கொழும்பு 07 விக்டோரியா பூங்காவுக்கான கல்விச் சுற்றுலா | 96 | 2018 டிசம்பர் 29 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

## 3.2.1. மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் பணியாட்தொகுதிக்கான பயிற்ச

| பயிற்சித் திட்டம் | பங்குபற்றியவர்களின் பெயர் / பதவி | திகதி | இடம் |
|---|---|---|---|
| நிறுவனத்தின் கூட்டுத் திட்டத்தை தயாரித்தல் சம்பந்தமான செயலமர்வு 2018-2022 | அனைத்து பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் | 2018 ஜனவரி 5 | ரேணுகா ஹோட்டல் |
| நிறுவனத்தின் கூட்டுத் திட்டத்தை தயாரித்தல் சம்பந்தமான செயலமர்வு 2018-2022 | அனைத்து பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் | 2018 ஜனவரி 20 | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் |
| நிறுவனத்தின் மூலோபாயத் திட்டத்தை தெளிவுபடுத்துவதற்கான குழுக்களை முன்னிலைப்படுத்தல் II | அனைத்து பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் | 2018 பெப். 12,14,16,20,21 மற்றும் 22 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கேட்போர்கூடம் |
| மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் சுமுகமான சந்திப்பு 2018 | அனைத்து பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் | 2018 மே 09 | இலங்கை மன்றக் கல்லூரி |
| கல்விசார் அபிவிருத்தி ஆய்வு, கலப்புக் கற்றல் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான செயலமர்வு | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கல்விசார் ஆளணி அங்கத்தவர்கள், வெளிவாரி விரிவுரையாளர்கள் | 2018 மே 30 | ஹில்டன் கலம்பு ரெசிடன்ஸ் |
| செயல் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் | அனைத்து பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் | 2018 ஜுன் 11,13,மற்றும் 14 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கேட்போர்கூடம் |
| Workshop on Maintaining PPE (SLAS 7 & 8) | திரு. ரீ.பீ.ரீ.எஸ்.விஜேசிங்க | 2018 ஜுலை 17 | திறன் அபிவிருத்தி நிதியம் |
| எழுதுநர் திறன் விருத்தி செயலமர்வு | திரு.ஆர்.எம்.டப்.எம். கருணாரத்ன மற்றும் திருமதி எச்.பீ.பீ.எல்.பத்திரண | 2018 ஜுலை 23,24,25 | திறன் அபிவிருத்தி நிதியம் |
| Office Package and Application Session | அனைத்து பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் | 2018 ஜுலை 18 மற்றும் 26<br>2018 ஆகஸ்ட் 2 மற்றும் 16 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கணனி ஆய்வுகூடம் |
| செயல் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வறிக்கையை சமர்ப்பித்தல் தொடர்பான கலந்துரையாடல் 2018 | அனைத்து பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் | 2018 ஆகஸ்ட் 7 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கேட்போர்கூடம் |
| பெறுகை செயற்பாடுகள் பற்றிய செயலமர்வு | சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர் மற்றும் உதவி நிதிப் பொறுப்பாளர் | 2018 ஆகஸ்ட் 2 மற்றும் 3 | திறன் அபிவிருத்தி நிதியம் |
| அரசாங்க பெறுகை முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு | திருமதி டீ.எஸ்.முரகே, திரு. ரீ.ஜே.ரீ.எஸ். விஜேசிங்க,திரு.ஐ.எம்.டீ.சீ. கே.இலங்ககோன். | 2018 ஜுலை 20 மற்றும் 26, 2018 ஆகஸ்ட் 3,9, மற்றும் 17 | அரச நிதிக் கணக்காளர்கள் சங்கம் |
| BTL நடைமுறைப்படுத்துவதற்கான அமர்வு | தொழிலாளர் கல்வியியல் பாடநெறியின் கல்விசார் ஆளணி | 2018 செப்டெம்பர் 4 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கணனி ஆய்வுகூடம் |
| தகவல் நிபுணர்களுக்கான, - அரசாங்க இணையப் பாதுகாப்பு மற்றும் சமூக ஊடகங்கள் தொடர்பான செயலமர்வு | திருமதி ஆர்.எம்.எஸ்.என். ரத்னாயக்க | 2018 ஒக்டோபர் 16 | தேசிய நூலகங்கள் மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபை |
| புதிய கணக்காய்வுச் சட்டம் பற்றிய செயலமர்வு | சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர் | 2018 ஒக்டோபர் 25 மற்றும் 26 | திறன் அபிவிருத்தி நிதியம் |
| கல்விசார் அபிவிருத்தி பற்றிய கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கான 44 ஆவது சர்வதேச கல்வி மாநாடு | கலாநிதி டப்.எஸ்.சந்திரசேக்கர | | |
| கல்விசார் அபிவிருத்தி பற்றிய கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கான சர்வதேச கல்வி மாநாடு | திரு.கே.ஏ.ஏ.என்.திலக்கரத்ன | 2018 நவம்பர் 16 மற்றும் 17 | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| கல்விசார் அபிவிருத்தி பற்றிய கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கான சமூக விஞ்ஞானம் பற்றிய சர்வதேச மாநாடு | திரு.கே.ஏ.ஏ.என்.திலக்கரத்ன | 2018 டிசம்பர்13 மற்றும் 14 | களணிப் பல்கலைக்கழகம் |
| நிதிக் கூற்றுக்கள் தொடர்பான மாநாடு | திரு.டீ.ஜீ.சீ.என்.பண்டார, திரு. கே.எஸ்.டீ.ஜீ.ரிச்மண்ட் | 2018 டிசம்பர் 18 | கிரேன்ட் ஒரியன்ட்டல் ஹோட்டல் |
| செயல் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வறிக்கையை சமர்ப்பித்தல் 2018 | ஒவ்வொரு பிரிவுகளின் / கிளையின்/ நிலையத்தின் / கூடத்தின் பிரதானி | 2018 டிசம்பர் 10 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கேட்போர்கூடம் |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2018, ம.வ.மே.நி.

## 3.3. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள

| ஆராய்ச்சியாளரின் பெயர் | தலைப்பு | வெளியிடப்பட்ட ஆண்டு | இடம் / வெளியீடு |
|---|---|---|---|
| பேராசிரியர் ஜே.ஏ.எஸ். கே.ஜயகொடி, திருமதி டப். பீ.எம்.டீ.பஸ்நாயக்க | The effect of Theme Knowledge Management Practises on Theme Performance; The Moderating Effect of Transformational Leadership and Team Cohensiveness | 2018 | முகாமைத்துவ இலங்கை ஜர்னல் |
| எம்.ஜீ.ஜீ.ஹேமகுமார | Knowledge Management Practices of Indigenous Doctors in Sri Lanka | 2018 | - |
| திருமதி கே.பீ.மாதொட்டஆரச்சி<br>ஜீ.வீ.பீ.என்.பெரேரா<br>எச்.பீ.ஜ.சம்பத்<br>ஏ.கே.என்.ஜே.பெரேரா<br>கே.என்.டீ.ஏ.செனெவிரத்ன | Impact of employees' commitment on sustained productivity; with reference to Government Institutions Sector in Sri Lanka | 2018 | ISOR - JBM e-ISSN: 2278-487X Vol. 02 |
2018 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயல் திட்டத்தின் மூன்று நோக்கங்களின் உபாய வழி (மூலோபாயங்கள்) உடாக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் சூழலுக்கு ஏதேனும் எதிர்மறைத் தாக்கம் ஏற்படுமாயின் அதனைக் குறைத்துக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டுள்ள நோக்களாவன,

- நோக்கம் 03 - ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொழில் முயற்சிகளைப் பலப்படுத்தல்
- நோக்கம் 06 - பௌதீக மற்றும் அழகியல் சூழலை மேம்படுத்துவதன் ஊடாக

பங்காளித் தரப்பினரிடையே திருப்தியை ஏற்படுத்தல்

- நோக்கம் 07 - நிர்வாக முறைமை மற்றும் செயற்பாட்டை மேம்படுத்தல்

3. ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொழில் முயற்சிகளைப் பலப்படுத்தல்
ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொழில் முயற்சிகளைப் பலப்படுத்தும் இலக்கை அடைந்துகொள்வதற்காக அறிஞர்கள் மற்றும் மாணவர்களிடத்தில் ஆராய்ச்சிக் கலாசாரத்தை விருத்தி செய்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஆகிய இரண்டு நோக்கங்களை 11 செயற்பாடுகளின் ஊடாக அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இங்கு பிரதானமாக அபிவிருத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி எனும் நோக்கத்தை அடைந்துகொள்ளும்போது பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கமைய சூழல் மீது ஏற்பட முடியுமான எதிர்மறையான தாக்கத்தைக் குறைத்துக்கொள்வதற்கு மற்றும் வளப் பயன்பாட்டின்போது வினைத்திறன் மற்றும் சுத்தம் மற்றும் சூழல் ரீதியில் சிறந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு கீழ் குறிப்பிடப்படும் மூன்று வழிமுறைகள் செயற்படுத்தப்பட்டன.

- ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்காக இலத்திரனியல் களஞ்சியப்படுத்தல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்தல்
- நூலக சேவைகளை வழங்கும்போது இலத்திரனியல் களஞ்சியப்படுத்தல் மற்றம் இலத்திரனியல் வசதிகள் பயன்பாட்டை மேம்படுத்தல்
- நூலகங்களை தன்னியக்கமயப்படுத்தல்

2017 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்பாட்டின் ஊடாக நிறுவனத்தின் நூலகத்தினது இடவசதிகளை அதிகரித்துக்கொள்ளல், நூலக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்போது வினைத்திறனைப் போன்றே தரமான உயர்ந்தளவிலான சேவையொன்றைப் பெற்றக்கொடுத்தல், நவீன வசதிகளைப் பயன்படுத்துவதற்கு மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததிக்காக பேண்தகு சேவையொன்றை நூலக சேவை வசதிகளை வழங்கும்போது பெற்றக்கொடுப்பதற்கு நிறுவனத்தினால் முடியுமாகியது.

20,000 இற்கும் அதிகமான நூல்கள் காணப்பட்ட மனித வள மேம்பாட்டு நிறுவன நூலகத்தின் பழைய நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்பவற்றை இலத்திரனியல் களஞ்சியப்படுத்தல் செயற்பாட்டிற்கு உட்படுத்தியமை காரணமாக நிறுவன வளவிலிருந்து அகற்ற முடியுமாக இருப்பதுடன் பயன்படுத்த முடியமான பல நூல்களை இலங்கையின் பாடசாலைகள், கல்வி நிறுவகங்களின் கோரிக்கையின் அடிப்படையில் பயன்பாட்டிற்காக வழங்குவதற்கு நிறுவனத்தினால் முடியுமாகியது. மேலும் நிறுவன வளவிலிருந்து அகற்றப்பட்ட பல நூலகத் தளபாடங்களும் மேலுள்ள முறையில் பயன்படுத்தி மீள் பாவனைக்காக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமாகியது. தற்போது இந்த வேலைத் திட்டத்தின் பணிகளில் சுமார் 80மூ  நிறைவு செய்யப்பட்டுள்ளதாக மகிழ்ச்சியுடன் குறிப்பிட முடியும்.

4. பௌதீக மற்றும் அழகியல் சூழலை மேம்படுத்துவதன் ஊடாக பங்காளித் தரப்பினரிடையே திருப்தியை ஏற்படுத்தல்
பௌதீக மற்றும் அழகில் சூழலை மேம்படுத்துவதன் ஊடாக தரப்பினர்களிடத்தில் திருப்தியை ஏற்படுத்துவதற்காக நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டில் பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனிடையே 2018 ஆண்டிற்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் உபாய வழிமுறைகள் முக்கியமாகும்.

- நிலவும் கட்டிட வசதிகளை விரிவுபடுத்தல்
- சூழல் நேய சூழலொன்றை உருவாக்குதல்
- சுகாதார - உடல்நல நிலைமைகளை மேம்படுத்தல்

2018 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவன வளவின புதிய நீட்டிப்பாக  நிறுவன அலகுகளின் வசதிகளை மேம்படுத்தும் மற்றும் நிறுவனத்தின் கட்டமைப்பை மீளத் திட்டமிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பெறுபேறாக நிறுவன வளவிலிருந்த அதிகளவிலான பொருட்களை மீளப் பயன்படுத்த முடியமான வகையில் தாபன விதிக் கோவைக்கமைய அனுமதிபெற்ற தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமாகியது. உரிய பிரகாரம் நிறுவன வளவிலிருந்து நீக்கப்பட்டமையின் காரணமாக சூழலுக்கு ஏற்பட முடியுமாக இருந்த பாதிப்புக்களை குறைத்துக்கொள்வதற்கு நிறுவனத்தினால் முடியுமாகியது.

சூழல்நேய சூழலொன்றை உருவாக்குவதற்காக நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளிடையே நிறுவன வளவினுள் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், இங்கு உணவு கொண்டுசெல்லும்போது பொலித்தீன் உறைகளுக்குப் பதிலாக உணவுப் பாத்திரங்களை கொண்டு வருவதற்கு நிறுவன ஊழியர்களை அறிவுறுத்தியதுடன் அதன் மிகவும் நடைமுறைச் சாத்தியமான முயற்சியாக நிறுவன ஊழியர் நலன்புரி சங்கத்தின் பங்களிப்புடன் அனைத்து ஊழியர்களுக்கும் பகலுணவுப் பொதியொன்றை இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், விரிவுரையாளர்களுக்கு இதுவரை பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் போத்தல்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நீண்ட காலமாக பயன்படுத்த முடியுமான நீர் போத்தல்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நிறுவனத்தில் அச்சிடல் அலுவல்களின்போதுஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்காக அவற்றை நிர்வகிப்பதற்கு சுய கட்டுப்பாட்டு ஊக்குவிப்பை போன்றே பாரியளவிலான அச்சிடல் நடவடிக்கைகளின்போது அவற்றை நிறைவேற்று ஆளணியின் ஒழுங்குபடுத்தலுக்கு கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

இதுவரை நிலவிய மின்சாரப் பயன்பாட்டுத் தொகுதியை தயார்செய்து மற்றும் நிறவனத்திற்கு மின்குமிழ்கள், குளிரூட்டி இயந்திரங்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்யும்போது மின்சாரத்தை சிக்கனமாக இலத்திரனியல் கருவிகளை கொள்வனவு செய்யும் முறையொன்றை தயாரித்தல், நிறுவனத்தினுள் மின்சாரப் பாவனையை குறைத்துக்கொள்வதற்காக நிறுவனத்தினரை அறிவுறுத்துவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குடி நீர் வீண்விரயத்தைக் குறைத்துக்கொள்வதற்காக சுத்திகரிக்கப்பட்ட நீர்ப் பாத்திரங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் உரிய பிரகாரம் நீரைப் பயன்படுத்துவதற்கு ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆகியன முக்கியமானவைகளாகும்.

சுகாதார - உடல்நலப் பாதுகாப்பு நிலைமைகளை மேம்படுத்துவதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிடையே ஊழியர்கள் மற்றும் நிறுவனத்தில் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் பாவனைக்காக சுத்திகரிக்கப்பட்ட குடிநீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை முக்கியமானதொரு நடவடிக்கையாகும்.

நிறுவனத்தை மறுசீரமைக்கும்போது நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு மலசலகூடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டது. நவீன உபகரணங்களைக்கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மலசலகூடத் தொகுதி காரணமாக நிறுவன ஊழியர்களின் உடல்நல ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்ததுடன் அதனூடாக வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்க முடியுமாக இருப்பதுடன் ஆரோக்கியமான வாழ்க்கையொன்றுக்கும் இந்த வசதிகள் உறுதுணையாக இருந்தது. உடல் ஆரோக்கியத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் மேசைக் கைக்குட்டைகள் (சேவியட்), கைகளைக் கழுவும் கிருமி நீக்கித் திரவம் போன்ற வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சுகாதாரம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேலும் உறுதி செய்யும் வகையில் நிறுவனத்தின் கழிவுகளை அகற்றும்போது அவற்றை உரிய முறையில் வேறுபடுத்தி சூழலுக்கு விடும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைய உக்குபவை, உக்காதவை என வேறுபடுத்தி கழிவுகளை அகற்றுவதற்கு நிறுவன ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5. நிர்வாக முறைமை மற்றும் செயற்பாட்டை மேம்படுத்தல்
பேண்தகு அபிவிருத்தியின் நிமித்தம் நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் அதன் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, நிறுவனத்தின் நிர்வாகம், பரீட்சைகள், மாணவர் கற்கை முகாமைத்துவ முறைமைகள் பயன்பாட்டிற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் தற்போது மாணவர் கற்கை முகாமைத்துவ முறைமை சிறப்பான வகையில் பயன்படுத்தப்படுவதுடன் நிர்வாகம் மற்றும் பரீட்சைகள் முகாமைத்துவ முறைமையைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றத. இந்த முறைமைகள் ஊடாக நிறுவனத்தினுள் தாள்கள் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அலுவலக இடவசதிகள் முகாமைத்துவத்திற்கும் இது மிகவும் முக்கியமானதாகும்.

6. மீளாய்வு
மொத்தமாக நிறுவனத்தின் கூட்டுத் திட்டத்தில் காணப்படும் இலக்குகளை தரமான கல்வித் திட்டமொன்றின் ஊடாக இலங்கையில் 'அறிவு - பொருளாதாரம்' இற்கு தாக்கமொன்றை ஏற்படுத்த முடியுமான பங்களிப்பை காட்டுவதற்கு உயர் மட்ட மனித வளங்கள் கூட்டமைப்பாக ணஅறிவு - சேவைப் பிரிவுகள்ண உருவாக்குவதனை அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் முக்கிய இலக்கான அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவதற்கான பொறுப்பை மிகச் சிறப்பான வகையில் நிறுவனத்தின் கூட்டுத் திட்டத்தின் ஊடாக முறையான விருத்தியுடன் முன்னெடுத்துச் செல்ல முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நிறுவனம் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கான செயற்பாட்டின்போது நாட்டிற்குப் பொருத்தமான (தகுதியுடைய) கல்வி நிறுவனமொன்றாக 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை சூழல் பாதுகாப்பு மற்றும் சூழலுக்கு ஏற்பட முடியுமான எதிர்மறையான தாக்கங்கள் சம்பந்தமான விபரங்கள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் சூழலியல் மற்றும் அனர்த்தத் தாக்கங்கள் உட்பட்ட இந்த பேண்தகு அபிவிருத்திக்கு அடிப்படையான இந்த அறிக்கை இவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்றது.

# கணக்காய்வு அறிக்கை

பணிப்பாளர்
மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் 2018 டிசம்பர் 31 இல உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.'. ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று.'. வருமானக் கூற்று.'. நிதிச் செயலாற்றல் கூற்று.'. இலாபநட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று.'. தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் (கம்பனிகளிற்கு பொருத்தமற்றது) என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும். இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது. (பொருத்தமானது என்றால் மாத்திரம்)

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்.'. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (பொருத்தமானவாறு) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ). இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இற்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்பெறும் காலத்தை வருடாந்தம் மீளாய்வுக்குட்படுத்தாமை காரணமாக கிரயம் ரூ. 5,460,216 பெறுமதிமிக்க சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக தேய்வுக்குட்படுத்தப்பட்டிருந்தாலும் தொடர்ந்தும் பயன்படுத்தப் படுகின்றது. அதற்கமைய இந்த மதிப்பீட்டுக் குறைபாட்டை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 03 இற்கமைய திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் குறிப்பிட வேண்டிய நானாவித செலுத்தப்பட வேண்டிய பெறுமதி ரூ.444,647 ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும் அந்த மதிப்பு ரூ. 554,581 என ரூ. 109,934 அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) பேரேட்டுக் கணக்கிற்கமைய நிலையான சொத்துக்கள் கொள்வனவுகளுக்கான மொத்தம் ரூ. 35,515,936 தொகை பெறுமதிக்குப் பதிலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சொத்துக்கள் சேகரிப்பு காசுப் பாய்ச்சலாக ரூ. 37,693,250 எனக் கொள்ளப்பட்டதனால் ரூ. 2,177,314 அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) முன்னைய ஆண்டில் சொத்துக்கள் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட மற்றும் இந்த ஆண்டின் காசுப் பாய்ச்சலுடன் தொடர்பில்லாத ரூ. 6,303,980 மீளாய்வாண்டில் செலவிடப்படாத மூலதன முதன்மைக் கணக்கிலிருந்து செலவிடப்பட்ட மூலதன முதன்மைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்தக் கொடுக்கல்வாங்கல் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சலாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிறுவகத்தினால் ஈட்டப்பட்ட நிதியில் ரூ. 44,772,390 பெறுமதிமிக்க சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படடிருந்தன. அந்தப் பெறுமதியை மூலதன முதன்மை மூலதனக் கணக்கில் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2015 ஆம் ஆண்டில் அன்பளிப்பாகக் கிடைத்த ரூ. 5,795,000 பெறுமதிமிக்க மோட்டார் வாகனத்தின் பெறுமதிக்கு சமமான செலவு மீதி உரிய காலத்தில் வருமானத்திற்குள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய ரூ.1,005,302 பெறுமதிமிக்க செலவுகள் நிதிக்கூற்றுக்களில் அட்டுறு செலவுகளாக இனங்காணப்பட வேண்டியிருந்தாலும் அவ்வாறு மேற்கொள்ளாததன் காரணமாக அந்தப் பெறுமதியினால் செலவுகள் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள்.'. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு (பொருத்தமானவாறு) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தின கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகத்தின அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி.'. கூட்டுத்தாபனம்.'. சபை.'. அதிகாரசபையின் (பொருத்தமானவாறு) உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனி.'. கூட்டுத்தாபனம்.'. சபை.'. அதிகாரசபையின் (பொருத்தமானவாறு) தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் (கம்பனிகளிற்கு மாத்திரம் பொருத்தமானது) என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(1)(ஈ) பிரிவு (கம்பனிகளிற்கு மாத்திரம் பொருத்தமானது) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி.'. கூட்டுத்தாபனம்.'. சபை.'. அதிகாரசபையால் (பொருத்தமானவாறு) முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன. (கம்பனிகளிற்கு மாத்திரம் பொருத்தமானது)

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் மனிதவள மேம்பாட்டு நிறுவகம் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல். ஈஈதவிர, (ஏதாவது காண்புகள் காணப்பட்டால் மாத்திரம்)

2.2 சட்டங்கள் விதிகள் / பிரமாணங்கள்

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை

| | |
|---|---|
| **I.** நி.பி. 371 மற்றும் ஜூலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | முற்பணம் வழங்குதல் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தாலும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் அல்லாத 14 பேருக்கு 121 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூ. 3,807,567 பெறுமதிமிக்க முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| **II.** நி.பி. 387 | நிறுவகத்தினால் செலுத்துகைகள் மேற்கொள்ளப்படும்போது போதுமானளவு வங்கி மீதி பற்றிக் கவனத்திற்கொண்டு செலுத்துகைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று 02 நடைமுறைக் கணக்குகளில் ரூ. 1,677,647 வங்கி மிகைப் பற்று நிலவுதல் அவதானிக்கப்பட்டது. |
| (ஆ).பல்கலைக்கழக தாபனக் கோவையின் ஂை ஆவது அத்தியாயம் | மேலதிக நேர வேலைக்காக முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் ரூ. 209,379 பெறுமதிக்கான மேலதிக நேர வேலைக்கு முன் அனுமதி பெற்றுக்கொள்ளபட்டிருக்கவில்லை. தாபன விதிக் கோவைக்கமைய செலுத்தப்பட வேண்டிய மேலதிக நேர வேலைக்கான கணிப்பு வீதத்தை (சுயவந) மாதாந்த இணைந்த சம்பளத்தின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டியிருந்தபோதிலும் அதனை மீறி நாளாந்த அடிப்படை மற்றும் மேலதிக நேர வேலை மணித்தியாலங்களை அடிப்படையாகக்கொண்ட இன்னுமொரு கணிப்பு வீதத்தின் அடிப்படையிலும் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2004 ஜூலை 29 ஆம் திகதிய, பீஈடீ / 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூ. 178,503,752 நிலையான வைப்பை முதலீடு செய்வதற்காக திறைசேரியின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் இலக்கம்: புச/01 மற்றும் 2004 ஜனவரி 26 ஆம் திகதிய சுற்றறிக்கை | 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய ரூ. 4,107,082 பெறுமதிமிக்க நூலகப் புத்தகங்கள் பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (உ) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 2/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அனைத்து நிதியாண்டிலும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பௌதீக ரீதியிலான பொருட்கள் கணக்கெடுப்பு அலுவல்களை நிறைவுசெய்து மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பு தொடர்பான அறிக்கையை பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரக்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்தபோதிலும் அவ்வாறு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 1995 ஜூலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட திகதி முதல் 03 மாத காலத்திற்குள் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட வேண்டியிருந்தபோதிலும் நிறுவகத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 04 பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 07 - 10 மாத காலம் எடுத்திருந்தது. |

2.4

(அ) பெறுகை (கொள்வனவு) வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (ஊ) உறுப்புரையை மீறி நிறைவேற்றப்பட்டிருந்த அலுவல்களுக்கு பொருந்தும் பிரகாரம் ஆண்டிறுதியில் பெறுகைத் திட்டத்தை திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து ஒப்பந்தப் பெறுமதியின் 10மூ இனை செயலாற்றுகைப் பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள வேண்டுமென ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் மாதிரி சோதனையின் இரண்டு வழங்குனர்களிடமிருந்து ரூ. 94,000 பெறுமதிக்கு அவ்வாறான செயலாற்றுகை பாதுகாப்புத் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.

ஏனைய அவதானிப்புக்கள் (அ)

2018 - 2022 உள்ளடக்கப்படும் வகையில் நிறுவகத்தின் 09 நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுதலுடன் தொடர்பாக தயாரிக்கப்பட்ட கூட்டுத் திட்டத்துடன் இயைந்து செல்லும் வகையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தபோதிலும் கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அதன் பெறுபேறுகளை அளவிடுவதற்காக பயன்படுத்தப்படும் செயலாற்றுகை குறிகாட்டி 2018 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்காமையினால் அந்தக் குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகையை அளவிட முடியாதிருந்தது.

(ஆ)

நிறுவகத்தின் பதவியணிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 98 ஆக இருந்ததுடன் உள்ளபடியான எண்ணிக்கை 54 ஆக இருந்தமையினால் 44 வெற்றிடங்கள் நிலவியது. பதவியணிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படாமல் கல்விசாரா பதவியணிக்காக ஒப்பந்த அடிப்படையில் 17 ஊழியர்களை ஆட்சேர்த்து மீளாய்வாண்டில் அந்த ஊழியர்களுக்கான சம்பளமாக ரூ. 7,543,227 செலுத்தப்பட்டிருந்தது.

(இ)

வரவு செலவுத் திட்ட எண்ணிக்கைகளுடன் ஒப்பிடும்போது நிலையான சொத்துக்கள் சுவீகரிப்புக்காக வரவு செலவு திட்ட செலவை விஞ்சி உள்ளபடியான செலவு 654 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், பராமரிப்புச் செலவு வரவு செலவுத் திட்ட செலவை விஞ்சி 50 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதற்கமைய நிறுவகத்தின் வரவு செலவுத் திட்டம் உண்மையான விதத்தில் தயாரிக்கப்பட்டு பயன்மிக்க முகாமைத்துவக் கட்டுப்பாட்டு உத்தியாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ)

27 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.580,655 பெறுமதிமிக்க முற்பணத் தொகை, 28 நாட்கள் முதல் 185 நாட்கள் வரையும் மேலும் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 206,650 பெறுமதிமிக்க 03 முற்பணத் தொகைகள் 50 நாட்கள் முதல் 268 நாட்கள் வரையிலான காலப் பகுதி வரை தீர்க்கப்படாமல் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூ.100,000 வரையறையைத் தாண்டி 04 நபர்களுக்கு 12 சந்தர்ப்பங்களில் ரூ.3,864,025 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(உ)

நிறுவகத்தின் கொடுக்கல் வாங்கல் அலுவல்களுக்காக 07 நடைமுறைக் கணக்குகள் பேணி வரப்படுவதுடன் ஆண்டிறுதியில் அவற்றின் தேறிய மீதி ரூ. 42,600,104 ஆக இருந்தது. அந்த மீதி காசுப் புத்தகத்திற்கமைய எதிர்மறை (-) ரூ. 1,251,321 முதல் ரூ. 37,406,915 நேர்மறை (.) மீதி வரையிலான இடைவெளிக்குள் நிலவியது. அந்த நடைமுறைக் கணக்குகளில் பாரியளவில் காசு சேகரிக்கப்படலானது நிதி முகாமைத்துவத்தின் பலவீனமாக அவதானிக்கப்படுகின்றது.

எச். எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| | நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | முன்வைக்கப்படும் பதில்கள் | 2018 இல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் முன்னேற்றம |
|---|---|---|---|---|
| 1.<br>1.2.<br>(அ) | நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகளுக்கான அடிப்படை | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இற்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்பெறும் காலத்தை வருடாந்தம் மீளாய்வுக்குட்படுத்தாமை காரணமாக கிரயம் ரூ. 5,460,216 பெறுமதிமிக்க சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக தேய்வுக்குட்படுத்தப்பட்டிருந்தாலும் தொடர்ந்தும் பயன்படுத்தப் படுகின்றது. அதற்கமைய இந்த மதிப்பீட்டுக் குறைபாட்டை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 03 இற்கமைய திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2019 ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பயன்பெறும் காலத்தை மதிப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய நீக்கப்பட வேண்டிய பொருட்கள் நீக்கப்பட்டதன் பின்னர் மீதிப் பொருட்களின் பயன்பெறும் காலத்தை மதிப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | | காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் குறிப்பிட வேண்டிய நானாவித செலுத்தப்பட வேண்டிய பெறுமதி ரூ.444,647 ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும் அந்த மதிப்பு ரூ. 554,581 என ரூ. 109,934 அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | அடுத்த நிதியாண்டின்போது இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - அதுவே - |
| (இ) | | பேரேட்டுக் கணக்கிற்கமைய நிலையான சொத்துக்கள் கொள்வனவுகளுக்கான மொத்தம் ரூ. 35,515,936 தொகை பெறுமதிக்குப் பதிலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சொத்துக்கள் சேகரிப்பு காசுப் பாய்ச்சலாக ரூ. 37,693,250 எனக் கொள்ளப்பட்டதனால் ரூ. 2,177,314 அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் கொள்வனவுடன் தொடர்பான சரியான செலவு காசுப் பாய்ச்சல் கூற்றில் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. | - அதுவே - |
| (ஈ) | | முன்னைய ஆண்டில் சொத்துக்கள் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட மற்றும் இந்த ஆண்டின் காசுப் பாய்ச்சலுடன் தொடர்பில்லாத ரூ. 6,303,980 மீளாய்வாண்டில் செலவிடப்படாத மூலதன முதன்மைக் கணக்கிலிருந்து செலவிடப்பட்ட மூலதன முதன்மைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்தக் கொடுக்கல்வாங்கல் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சலாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | செலவிடப்படாத மூலதன கணக்குடன் தொடர்பான மீதியானது முன்னைய ஆண்டுடன் தொடர்பான மூலதன நிதியை உள்ளடக்கியிருந்ததுடன் அந்த நிதி இதுவரை பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. அந்த நிதியை நடப்பு ஆண்டில் குறிப்பிட்ட மூலதனச் செலவை தீர்ப்பதற்காகப் பயன்படுத்தியமையினால் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் காசுப் பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டுள்ளது. | - அதுவே - |
| (உ) | | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிறுவகத்தினால் ஈட்டப்பட்ட நிதியில் ரூ. 44,772,390 பெறுமதிமிக்க சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்தப் பெறுமதியை மூலதன முதன்மை மூலதனக் கணக்கில் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2015 ஆம் ஆண்டில் அன்பளிப்பாகக் கிடைத்த ரூ. 5,795,000 பெறுமதிமிக்க மோட்டார் வாகனத்தின் பெறுமதிக்கு சமமான செலவு மீதி உரிய காலத்தில் வருமானத்திற்குள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் பாடநெறி நிதி ஊடாக நேரடியாக சொத்துக்கள் கொள்வனவுகளை மேற்கொள்ளப்பட்டமையினால் அது மூலதனப் பாய்ச்சலாக இனங்காணப்பட்டமையினால் இந்த மீதிகள் உருவாகியுள்ளன. இந்த மூலதனச் செலவுகளை மூலதனக் கணக்கிற்கு மாற்றுவதற்கு அடுத்த நிதியாண்டின்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மோட்டார் வாகனத்திற்கான அன்பளிப்புப் பெறுமதி அடுத்த நிதியாண்டின்போது வருமானத்தில் இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட மூலதனச் செலவுகள் இனங்காணப்பட்டு தேய்வை கணக்கிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | | மீளாய்வாண்டிற்குரிய ரூ.1,005,302 பெறுமதிமிக்க செலவுகள் நிதிக்கூற்றுக்களில் அட்டுறு செலவுகளாக இனங்காணப்பட வேண்டியிருந்தாலும் அவ்வாறு மேற்கொள்ளாததன் காரணமாக அந்தப் பெறுமதியினால் செலவுகள் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள அட்டுறு செலவுகள் பரீட்சை அலுவல்கள் மற்றும் விரிவுரைகளுடன் தொடர்பாக செலுத்த வேண்டிய செலவுகளாகும். இந்தச் செலவுகள் ஏலவே இனங்காணப்பட்டு செலுத்தப்பட வேண்டிய செலவுகளாக கணக்கு வைத்தல் சிரமமான அலுவலாகும். அடுத்த நிதியாண்டில் குறிப்பிட்ட செலவுகளுக்காக ஒதுக்கீடுசெய்து அந்தக் குறைபாட்டை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். | - அதுவே - |
| (எ) | | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று இருப்புக் கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய இருப்புக்களின் பெறுமதி ரூ.1,507,015 ஆக இருந்தாலும் நிதிக் கூற்றுக்களில் அந்தப் பெறுமதி ரூ. 1,530,156 குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூ. 23,141 வேறுபாடு நிலவியது. | பொருட்கள் பெறப்பட்டமை தொடர்பான 2 பத்திரங்களுடன் தொடர்பான செலுத்துகைகள் மேற்கொள்ளப் படாமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்தக் கடனை கடன் வழங்குனர்களின் கீழ் உள்ளடக்கி கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | சீர் செய்யப்பட்டுள்ளது. |
| (ஏ) | | மூலதன முதன்மை பேரேட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி ரூ.85,052,490 ஆக இருந்தாலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூ.84,784,426 குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூ. 268,064 வேறுபாடு நிலவியது. | மூலதன முதன்மை கணக்கில் ரூ. 134,032 பற்று மீதி நிலவியதை 2017 கணக்காய்வு ஐய வினாக்கள் ஊடாக சுட்டிக்காட்டியிருந்தமையினால் அதனை சீர் செய்வதற்கு அந்த மீதியை அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றியமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. (இணைப்பு 5, 6) | - அதுவே - |
| 2.<br>2.2.<br>(அ) | சட்டங்கள் விதிகள் / பிரமாணங்கள்<br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை<br><br>**i**. நி.பி. 371 மற்றும் ஜூலை 14 ஆம் திகதிய 3∴2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | முற்பணம் வழங்குதல் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தாலும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் அல்லாத 14 பேருக்கு 121 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூ. 3,807,567 பெறுமதிமிக்க முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்குவதனை தற்போது முற்றாக நிறுத்தியுள்ளதுடன் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணம் வழங்கப்படுகின்றது. | - அதுவே - |

| | | | | |
|---|---|---|---|---|
| | ii. நி.பி. 387 | நிறுவகத்தினால் செலுத்துகைகள் மேற்கொள்ளப்படும்போது போதுமானளவு வங்கி மீதி பற்றிக் கவனத்திற்கொண்டு செலுத்துகைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று 02 நடைமுறைக் கணக்குகளில் ரூ. 1,677,647 வங்கி மிகைப் பற்று நிலவுதல் அவதானிக்கப்பட்டது. | இந்த ஆண்டில் நிறுவகத்தின் கணக்குவைத்தலை மேலும் முறைப்படுத்துவதற்காக மக்கள் வங்கியுடன் சேகரிப்புக் கணக்கொன்றின் ஊடாக பாடநெற-ிகள் தொடர்பான கட்டணங்கள் அறவிடப்பட்டன. அதனால் நி-றுவகத்தின் வருமானம் அந்த சேகரிப்புக் கணக்கு ஊடாக உரிய வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்படல் வேண்டும். ஆரம்ப சந்தர்ப்பங்களில் அந்த மாற்றல்கள் வங்கிக் கூற்றின் பின்னர் மேற்கொள்ளப்பட்டமையினால் காசுப் புத்தகத்தின் வங்கி மீதி எதிர்மறையாக (-) இருந்தாலும் ஒருபோதும் வங்கிக் கணக்கின் மீதி எதிர்மறை பெறுமதியை கொண்டிருக்கவில்லை. தற்போது இணையவழி (ழுடெைநெ) ஊடாக உர-ிய கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றது. | - அதுவே - |
| (ஆ) | பல்கலைக்கழக தாபனக் கோவையின் ix ஆவது அத்தியாயம் | மேலதிக நேர வேலைக்காக முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் ரூ. 209,379 பெறுமதிக்கான மேலதிக நேர வேலைக்கு முன் அனுமதி பெற்றுக்கொள்ளபட்டிருக்கவில்லை. தாபன விதிக் கோவைக்கமைய செலுத்தப்பட வேண்டிய மேலதிக நேர வேலைக்கான கணிப்பு வீதத்தை (சுயவந) மாதாந்த இணைந்த சம்பளத்தின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டியிருந்தபோதிலும் அதனை மீறி நாளாந்த அடிப்படை மற்றும் மேலதிக நேர வேலை மணித்தியாலங்களை அடிப்படையாகக்கொண்ட இன்னுமொரு கணிப்பு வீதத்தின் அடிப்படையிலும் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | • இதன் பிறகு மேலதிக நேர வேலை சம்பந்தமாக முன் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>• அத்துடன் மேலதிக நேர வேலையில் ஈடுபடுபவர்களுக்கும் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.<br>• 2015.10.29 ஆம் திகதி நடைபெற்ற 46 ஆவது நிதிக் குழுக் கூட்டத்தின்போது நிறுவகத்தினால் நடாத்தப்படும் பல்வேறு பாடநெறிகளில் பங்குபற்றும் பணியாட் தொகுதி அங்கத்தவர்களுக்கு மேலதிக நேர வேலைக்கான செலுத்துகை தொடர்பான நிச்சயிக்கப்பட்ட கணிப்பு வீதம் (Rate) தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>• இந்த செலுத்துகைகள் குறிப்பிட்ட பாடநெறிகள் மூலம் ஈட்டப்படும் வருமானத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுவதே இவ்வாறு மேற்கொள்வதற்கான காரணமாகும். | மேலதிக நேர வேலை தொடர்பாக முன் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மாத்திரம் செலுத்துகை மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | • எனவே ஊழியர்கள் வார இறுதி விடுமுறை நாட்களில் மற்றும் வார நாட்களில் அலுவல் நேரத்தின் பின்னர் மேற்கொள்ளும் மேலதிக நேர வேலையை நிறுவனத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகள் மூலம் ஈட்டப்படும் வருமானத்தில் ஏலவே தீர்மானிக்கப்பட்ட கணிப்பு வீதங்களின் கீழ் (சுயவந) மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>• நிதிக் குழுவின் இந்தத் தீர்மானம் 2015 நவம்பர் 12 ஆம் திகதி நடைபெற்ற 362 ஆவது கல்வி சபையினால் (யுஉயனநஅஉை ஊழரஉெடை) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2004 ஜூலை 29 ஆம் திகதிய, பீஈடீ / 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூ. 178,503,752 நிலையான வைப்பை முதலீடு செய்வதற்காக திறைசேரியின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | • ரூ.138,412,500 தொகைக்கான குறிப்பிட்ட நிலையான வைப்புக்காக திறைசேரியின் அங்கீகாரம் ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் மீதி வைப்புக்களுக்கும் திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | - அதுவே - |
| (ஈ) | தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் இலக்கம்: ஜ்ஸ/01 மற்றும் 2004 ஜனவரி 26 ஆம் திகதிய சுற்றறிக்கை | 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய ரூ. 4,107,082 பெறுமதிமிக்க நூலகப் புத்தகங்கள் பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டில் இறுதியாக நூலகப் புத்தகங்கள் பற்றிய கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கை பணிப்பாளர் ஊடாக நிதிப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2017 நவம்பர் மாதம் நூலகப் புத்தகங்கள் கல்வி பீடக் கட்டிடத்திலிருந்து மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவக அலுவலகக் கட்டிடத்திற்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் புத்தகங்கள் பற்றிய கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் கொண்டுவரப்பட்ட புத்தகங்களின் ஒரு பகுதியை மீண்டும் நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்பட்டதன் காரணமாக புத்தகங்கள் பற்றிய கணக்கெடுப்பை இடைநடுவில் நிறுத்த வேண்டியேற்பட்டது.<br><br>தொடர்ந்தும் புத்தகங்களை நீக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையினால் அதன் பின்னர் புத்தகங்கள் தொடர்பான கணக்கெடுப்பை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் 2019 ஜூன் மாதம் புத்தகங்கள் பற்றிய கணக்கெடுப்பொன்றை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டில் நூலகப் புத்தகங்கள் பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 2/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அனைத்து நிதியாண்டிலும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பௌதீக ரீதியிலான பொருட்கள் கணக்கெடுப்பு அலுவல்களை நிறைவுசெய்து மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பு தொடர்பான அறிக்கையை பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரக்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்தபோதிலும் அவ்வாறு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு முன்னர் நிறுவகத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்களை இனங்கண்டுகொள்ளுதல் தொடர்பாக புதிய குறியீட்டு முறையொன்று (Coding System) அறிமுகஞ் செய்யப்பட்டது. அத்துடன் அந்த நிலையான சொத்துக்களை கணனிமயப்படுத்தும் அலுவலும் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்கொண்டதன் பின்னர் 2018 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பு 2019 ஜனவரி 10, 11 ஆம் திகதிகளில் 4 குழுக்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.<br><br>நிலையான சொத்துக்கள் 10 பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்படுத்தப்பட்டிருந்ததுடன்(Categorization) குறியீடு செய்யப்படும்போது சில பொருட்கள் (சொத்துக்கள்) பிழையான முறையில் குறியீடு செய்யப்பட்டிருந்தது. அந்தச் சொத்துக்கள் மீண்டும் சரியான முறையில் வகைப்படுத்தப்பட்டு குறியீடு இடப்பட்டது. இந்த செயற்பாட்டின் பின்னர் அனைத்து நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்களை கணனிமயப்படுத்தும் நடவடிக்கை மீண்டும் மேற்கொள்ளப்பட்டது.<br><br>இந்த சீர்செய்யும் செயற்பாட்டின் பின்னர் இரண்டாவது தடவையாக மீண்டும் பொருட்கள் கணக்கெடுப்பு 2019 மார்ச் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் அது தொடர்பான அறிக்கை பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் அது கல்வி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 1995 ஜுலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட திகதி முதல் 03 மாத காலத்திற்குள் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட வேண்டியிருந்தபோதிலும் நிறுவகத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 04 பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 07 - 10 மாத காலம் எடுத்திருந்தது. | 1.Diploma in Tamil as an addi-tional language -No.12<br>புள்ளிகள் ஜுன் மாதத்தில் கிடைத்துள்ளது. இறுதிக் கட்டப் பாடநெறியுடன் டிப்ளோமா பாடநெறியின் பெறுபேறுகள் வெளியிடப்படல் வேண்டும். அதற்காக அடிப்படை, இடைநிலை, உயர் (குழரனெயவழைஜெ ஐவெநசஅனையைவநஇ ர்பைாநச) பாடநெறிக-ளின் பெறுபேறுகள் அவசியமாகும். இந்த மூன்று பாடநெறிகளுக்கும் மாணவர்களுக்கு தனித் தனியான பதிவு இலக்கங்கள் ஒவ்வொரு பாடநெறிக்கும் வழங்கப்பட்டுள்ளது.<br>தே.அ.அ. இலக்கம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் பெறுபேறுகளை ஒப்பிடுவதற்கு செலவான காலம் அதிகமாக இருந்தது.<br><br>2. Master of Business Manage-ment - No. 04<br><br>4 ஆவது செமஸ்டர் பரீட்சை<br>2018 பெப்ரவரி - ஏப்ரல் கல்விசாரா பதவியணியின் பணிப் பகிஷ்கரிப்பு தாக்கம் செலுத்தியுள்ளது. கருத்திட்ட அறிக்கையை (ீசழதநஉவ சநிழசவ) பெற்றுக்கொடுப்பதற்கான இறுதித் திகதி ஜனவரி 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆய்வறிக்கைக்கான (வூநளளை) வாய்மூல மதிப்பீடு 2018 ஜுலை மாதம் நடாத்தப்பட்டது. அவர்களது இறுதி அறிக்கை ஆகஸ்ட் மாதத்திலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>3.Master of Business Manage-ment - No. 06<br><br>1 ஆவது செமஸ்டர் பரீட்சை<br>2018 கல்விசாரா பதவியணியின் பணிப் பகிஷ்கரிப்பு தாக்கம் செலுத்தியுள்ளது. இங்கு ஆடீஆ 04 பாடமானது 2 பகுதிகளாக நடாத்தப்பட்டுள்ளதுடன், ஐஐ ஆம் பகுதியின் புள்ளிகள் மதிப்பீட்டாளரிடமிருந்து தாமதமாகக் கிடைத்துள்ளது. சில மாணவர்கள் பகுதிகளை மாற்றி பதில் எழுதியிருந்ததுடன் அதனை சீர் செய்வதற்கு மற்றும் புள்ளிகளிடையேயான முரண்பாடுகளை சீர் செய்வதற்கு காலம் எடுத்துள்ளது.<br><br>4.Master of Human Resource Management – No. 08<br><br>2 ஆவது செமஸ்டர் பரீட்சை<br>இந்தப் பரீட்சையானது 2018 ஆம் ஆண்டில் கல்விசாரா ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்பு நடைபெற்ற காலத்திலேயே நடைபெற்றது. அக் காலப் பகுதியில் சில விடைத்தாள்களை மதிப்பீடு செய்பவர்களிடம் பெற்றுக்கொடுத்தல் சிக்கலான விடயமாக இருந்தது. | இந்த நிலைமைகளை குறைத்துக்கொள்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 2.4 (அ) | | பெறுகை (கொள்வனவு) வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (ஊ) உறுப்புரையை மீறி நிறைவேற்றப்பட்டிருந்த அலுவல்களுக்கு பொருந்தும் பிரகாரம் ஆண்டிறுதியில் பெறுகைத் திட்டத்தை திருத்தியமைக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டுடன் தொடர்பான பெறுகைத் திட்டத்தை இற்றைப்படுத்தும் அலுவல் 2018 டிசம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | | தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து ஒப்பந்தப் பெறுமதியின் 10மூ இனை செயலாற்றுகைப் பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள வேண்டுமென ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் மாதிரி சோதனையின் இரண்டு வழங்குனர்களிடமிருந்து ரூ. 94,000 பெறுமதிக்கு அவ்வாறான செயலாற்றுகை பாதுகாப்புத் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தில் போதுமானளவில் களஞ்சியசாலை வசதிகள் இல்லாமையின் காரணமாக உத்தரவாதம் வேண்டப்பட்டிருந்தாலும் பொருட்களை களஞ்சியப்படுத்த முடியாமையின் காரணமாக தேவைக்கேற்ப பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |
| 3. (அ) | ஏனைய அவதானிப்புக்கள | 2018 - 2022 உள்ளடக்கப்படும் வகையில் நிறுவகத்தின் 09 நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுதலுடன் தொடர்பாக தயாரிக்கப்பட்ட கூட்டுத் திட்டத்துடன் இயைந்து செல்லும் வகையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தபோதிலும் கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அதன் பெறுபேறுகளை அளவிடுவதற்காக பயன்படுத்தப்படும் செயலாற்றுகை குறிகாட்டி 2018 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்காமையினால் அந்தக் குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகையை அளவிட முடியாதிருந்தது. | 2018 - 2022 காலப் பகுதிக்கான நிறுவகத்தின் கூட்டுத் திட்டத்தில் 2018 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்தாலும் செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 14 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த விடயங்களை குறிப்பிட்ட ஆண்டில் நிறைவேற்றுவதற்கு சிரம-மாக இருந்தமையினால் அந்த விடயங்களை 2019 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்துவதற்கு நி-றுவகத்தின் நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டுடன் தொடர்பான செயல் திட்டம் திருத்தியமைக்கப்பட்டதுடன் அந்த திருத்தியமைக்கப்பட்ட திட்டம் 401 ஆவது கல்விக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | | நிறுவகத்தின் பதவியணிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 98 ஆக இருந்ததுடன் உள்ளபடியான எண்ணிக்கை 54 ஆக இருந்தமையினால் 44 வெற்றிடங்கள் நிலவியது. பதவியணிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படாமல் கல்விசாரா பதவியணிக்காக ஒப்பந்த அடிப்படையில் 17 ஊழியர்களை ஆட்சேர்த்து மீளாய்வாண்டில் அந்த ஊழியர்களுக்கான சம்பளமாக ரூ. 7,543,227 செலுத்தப்பட்டிருந்தது. | • மீளாய்வாண்டில் நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக பதவிகளின் எண்ணிக்கை 98 ஆக இருந்ததுடன் அதில் 54 தரநிலைப் பதவிகளுக்குரியதாகும். 2018 ஆம் ஆண்டில் தரநிலை பதவியணியின் 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.<br>• முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பதவியணிக்கான அங்கீகாரத்தை வழங்கும்போது 2017 இல் ஒப்பந்த அடிப்படையில் ஊழ-ியர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் அவர்கள் நிறுவகத்தின் நிரந்தரப் பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான பிரதியீடாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படவில்லை எனவும் அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வரவு செலவுத் திட்ட எண்ணிக்கைகளுடன் ஒப்பிடும்போது நிலையான சொத்துக்கள் சுவீகரிப்புக்காக வரவு செலவு திட்ட செலவை விஞ்சி உள்ளபடியான செலவு 654 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், பராமரிப்புச் செலவு வரவு செலவுத் திட்ட செலவை விஞ்சி 50 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதற்கமைய நிறுவகத்தின் வரவு செலவுத் திட்டம் உண்மையான விதத்தில் தயாரிக்கப்பட்டு பயன்மிக்க முகாமைத்துவக் கட்டுப்பாட்டு உத்தியாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு முதல் வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் நிலவும் குறைபாடுகளை குறைத்துக்கொள்வதற்கும், வரவு செலவுத் திட்டத்துடன் இயைந்திராத சந்தர்ப்பங்களில் வரவு செலவுத் திட்ட ஆவணத்தை திருத்தியமைப்பதற்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. | - அதுவே - |
| (ஈ) | 27 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.580,655 பெறுமதிமிக்க முற்பணத் தொகை, 28 நாட்கள் முதல் 185 நாட்கள் வரையும் மேலும் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 206,650 பெறுமதிமிக்க 03 முற்பணத் தொகைகள் 50 நாட்கள் முதல் 268 நாட்கள் வரையிலான காலப் பகுதி வரை தீர்க்கப்படாமல் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூ.100,000 வரையறையைத் தாண்டி 04 நபர்களுக்கு 12 சந்தர்ப்பங்களில் ரூ.3,864,025 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணங்களின் தீர்க்கப்பட்ட திகதியாக அந்த முற்பணங்களை தீர்ப்பதற்கான வவுச்சர்களை நிதிப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உண்மையிலேயே அந்த முற்பணங்களின் மீதி இருப்பின் அதனை செலுத்தித் தீர்த்த திகதி அல்ல.<br><br>எவ்வாறாயினும் முற்பணங்களைத் தீர்க்கும் அலுவல்களும் தற்போது முறையாக மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>எதிர் காலத்தில் மேலும் இயைந்த வகையில் அலுவல் மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. | முற்பணங்களை தீர்க்கும் அலுவல்கள் தற்போது முறையாக மேற்கொள்ளப்படுகின்றது. |
| (உ) | நிறுவகத்தின் கொடுக்கல் வாங்கல் அலுவல்களுக்காக 07 நடைமுறைக் கணக்குகள் பேணி வரப்படுவதுடன் ஆண்டிறுதியில் அவற்றின் தேறிய மீதி ரூ. 42,600,104 ஆக இருந்தது. அந்த மீதி காசுப் புத்தகத்திற்கமைய எதிர்மறை (-) ரூ. 1,251,321 முதல் ரூ. 37,406,915 நேர்மறை (+) மீதி வரையிலான இடைவெளிக்குள் நிலவியது. அந்த நடைமுறைக் கணக்குகளில் பாரியளவில் காசு சேகரிக்கப்படலானது நிதி முகாமைத்துவத்தின் பலவீனமாக அவதானிக்கப்படுகின்றது. | | குறிப்பிட்ட நிதி 2019 ஜனவரி மாதம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. |